உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 34 | ஆனந்த – மார்கழி – 10—1—75 | இதழ் 2

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே – சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## கருணை மழை!

**கருணைக்கடல் :-**

இறைவனின் கருணை எல்லையற்றது; அக்கருணையை அறிந்தவர் உலகத்தில் நிகழும் எல்லாச் செயல்களையும் இறைவனின் அருட்செயலாகவே மதிப்பர். இன்பமும் துன்பமும் எல்லாம் இறைவன் அருள் விளையாட்டே. அவற்றின் அடிப்படைப்பொருளை உணர்தற்கு நிதானமும், பொறுமையும், ஆழ்ந்த சிந்தனையும் வேண்டும். இறைவன் கருணையைத் " தனிப்பெருங் கருணை " என்று சான்றோர் போற்றக் காண்கிறோம் "கேழில் பரங்கருணை" என்று மணிவாசகப் பெருமானும் போற்றுவர். "கரையிலாக் கருணை மாகடல்" என்று திருவிசைப்பாக் கூறும். அக்கருணை

வெளிப்பாடே உலகில் நிகழும் நிகழ்ச்சிகள் எல்லாம். காலத்திற்குத் தகுந்த தட்ப வெப்பங்களையும், வெய்யில் மழை முதலியவற்றையும் அளித்து உலகைச் செழிக்கவைப்பதும் அவனே. அவ்வாறே சிலபோது நிலைமையை அறவேமாற்றி உலகை வறட்சியுட் படுப்பவனும் அவனே. அப்போது உலகம் என்ன எண்ணுகிறது? செழித்தநிலையில் இல்லாத தெய்வசிந்தனை வறண்ட நிலையில் தானே வந்து விடக் காண்கின்றோம்.

## மழை பொய்த்தது:-

துன்பம் வந்தபோதுதான் "கடவுளே" என்று துதிபாடுகின்றது மனிதமனம். துன்பத்திலிருந்து விடுதலை நல்கி இன்ப வாழ்வுதருவாய் இறைவா என்று எந்நேரமும் வழிபடுகின்றது. அண்மையில் இந்நிலை வந்தது நம் நாட்டிற்கு. மழையின்மையால் மாநிலங்கள் வறண்டன; பயிர்கள் வாடின; உணவுப்பஞ்சம் தலையெடுக்கத் தொடங்கி விட்டது. மக்கள் வறட்சிப் பகுதிகளை விட்டு உணவுதேடி குடும்பம் குடும்பமாகப் புறப்பட்டுவிடும் அளவிற்கு வானம் பொய்த்து விட்டது. ஆறுகள் வறண்டன. "மழையின்றி மாநிலத்தார்க்கு இல்லை" என்ற உண்மையை உலகம் உணர்ந்தது.

"மாதவர் நோன்பும் மடவார் கற்பும் காவலன் காவல் இன்றெனின் இன்றால்" என்று மணிமேகலை பாடிற்று. பெருமுனிவர்கள் தவவிரத வொழுக்கங்களும், குலப்பெண்டிர் கற்பொழுக்கமும் செங்கோல் வேந்தன் நல்லரசு புரிதலால் காக்கப்பெறும் என்பது கருத்து. செங்கோல் வேந்தன் நல்லாட்சியோ வான்நோக்கி நிற்பது. இதனாலன்றோ "வான் நோக்கி வாழும் உலகெல்லாம்" என்று பொதுமறை பாடிற்று.

## மழையும் நம்பிக்கையும்:-

மாதம் மும்மாரி பொழிந்து உலகை வாழ்வித்த பழங்காலம் எங்கே? மாரி பொய்த்த இக்காலம் எங்கே? சிறப்பொடு பூசனை நிகழவேண்டுமாயின் மழைபெய்தல் வேண்டுமே! அறிவுடைப் பெருமக்களும், கடவுள்நெறிப் பற்றுடையவர்களும் சிந்தித்தார்கள். விஞ்ஞானம் துணைபுரிந்திடமுடியாத - அறிவியலிற்கு ஆட்படாத - பகுத்தறிவு வாதத்திற்கு அப்பாற்பட்ட தெய்வீக ஆற்றலே, வறண்ட நாட்டிலே வான்மழை பெய்விக்க முடியும் என்று நம்பினார்கள். அந்தநம்பிக்கையைச் செயற்படுத்தினார்கள். "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்பது அநுபவத்தில்

ஊறி எழுந்த பழமொழி அன்றோ ? அப்பழமொழி மெய்யாயிற்று. கடவுள் வழிபாட்டு முறையில் மழை வேண்டிய ஆழ்ந்த விரதங்கள் உண்மைப் பயனை விளைத்தன.

## தருமையாதீனத்தே மழை வேண்டி வழிபாடுகள்:-

தருமையாதீனத்தில் 26 ஆவது குருமாமணியாக எழுந்தருளியுள்ள ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அருட்கட்டளையின்படி ஆதீனத் திருக்கோவில்களில் உலக நல்வாழ்வின் பொருட்டுச் சிறப்பு வழிபாடுகள் நிகழ்ந்தன. "மேகராகக் குறிஞ்சி" ப்பண் அமைந்த திருமுறைப் பதிகங்கள் பக்தி நலம் கனியப் பாராயணம் செய்யப்பெற்றன. ஆதீனத் திருநெறிய தெய்வத் தமிழ்மன்றத்தில் வேள்வி நிகழ்த்தப் பெற்றது. ஆதீன மடாலயத்தின் முன்புறமுள்ள திருக்குளத்தில் இடுப்பளவு நீரில் நின்று வேதமந்திரங்களை சிந்தித்து வருண ஜபம் செய்தனர் வேத விற்பன்னர்கள். தருமபுரீசுவரர் திருக்கோயிலில் திருநந்தி தேவர்க்குத் தொட்டிகட்டித் தண்ணீர் நிரப்பப் பட்டது. நீரில் முழுகிக் குளிர்ந்து நின்றார் நந்தியெம்பெருமான். இவ்வாறு செய்வித்ததுடன், விராடபருவம் படிக்கப்பெற்றது.

திருவெம்பாவைத் திருப்பாடல்களைப்பற்றிய தொடர் விரிவுரைகளை ஆதீனத் திருக்கோயில்கள் அனைத்திலும் திருவாதிரைக்குமுந்திய பத்துநாட்களிலும் தக்காரைக்கொண்டு நிகழ்த்துவித்தது ஸ்ரீலஸ்ரீ குருமாமணியவர்களது திருவுள்ளம். திருவெம்பாவையில் மணிவாசகப்பெருமான் நாடு செழிக்க மழை பெய்யவும், கன்னிப்பெண்கள் நல்ல மணவாளர்களைப் பெறவுமன்றோ பாடுகின்றார்; "முன்னிக் கடலைச் சுருக்கி" என்ற திருப்பாட்டில் "இன்னருளே என்னப் பொழியாய் மழை !" என்று மனமுருகி வேண்டுகின்ற வேண்டுகோள் உள்ளதன்றோ? அதற்குத்திருச் செவி சாய்க்காமல் இருப்பானோ அருள்வடிவான எம்பெருமான்!

இவ்வாறே மழை வேண்டி ஆழ்ந்த தெய்வபக்தியுடன் அடியவர்கள் வேண்டியது பலித்து, மழை பெய்தது; வானம் இருண்டு மேகம்திரண்டு பெய்த பெருமழையில் நிலம் குளிர்ந்தது; வயல்கள் நிறைந்தன.

## உண்மை விளக்கம்:-

முறைவேண்டி நின்றார்க்கும் குறைவேண்டி நின்றார்க்கும் ஒப்பநாடி நின்று அருள் புரிதலால் அன்றோ இறைவனின் திருக்கருணையை வியந்து போற்றுகின்றோம் நாம். நம்முடைய செயல்

சிந்தனை, ஒழுக்கமெல்லாம் மிகத்தூயனவல்ல, நம்முடைய வேண்டுகோளுக்கே இறைவன் இரங்கி அருள் செய்கின்றான் என்றால், "வானங்கரன் பெய்க மழை" என்று நம் தருமையாதீனம் பதினான்காவது குருமூர்த்திகள் கூறியபோது ஏன் அவர்கட்கு இரங்கி அருள்புரிந்திருக்கமாட்டான் என்று மன நிறைவு உண்டாகின்றது அன்றோ?

"ஐய ஐயோ எம்பெருமான் திருக்கருணை இருந்தவாறே" என்று அப்பரடிகள் திருவுள்ளம் கசிந்து உருகித் தமக்கருளிய தனிப்பெருங் கருணையைப் பரவுகின்றார். அவ்வாறே நாமும் பெருமானின் பெருங்கருணைத் திறம் உணர்ந்து இன்புறவே இந்நிகழ்ச்சியை நிகழ்த்திக் காட்டினன் இறைவன் என்று எண்ணத்தோன்றுகிறது.

**சான்றோர் கருத்துரை:-**

நட்டிலே மழைபொழிந்தால்தான் பல்லுயிர்களுக்கும் உணவு வளம் சுரக்கமுடியும். உணவு வளஞ்சுரத்தலே நாடு செழித்திட நல்ல துணையாகும். இந்தியப் பெருநாடு ஏழைநாடு. தமிழ்நாடு நீர்வளமும் நிலவளமும் சிறந்த திருநாடு. இப்பெருநாட்டில் ஓடுகின்ற ஆறுகள் ஆற்றுப்பெருக்கற்று அடி சுடும் நாளிலும் ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும் கருணை உடையவை. பொன்னியும், வையையும், பாலாறும் பொருநையும் என இவை ஓடுதலாலேயே, 'மேனி செழித்தது தமிழன்னைக்கு' என்று புதுமைக் கவிஞர் பாரதி பாடுவார். சேக்கிழாரும், 'அண்ணல் பாகம் ஆளுடை நாயகி, உண்ணெகிழ் கருணையின் ஒழுக்கம் போன்றது' என்று ஆற்றின் பெருக்கிற்கு அம்மையின் கருணைப்பெருக்கையே ஒப்பிட்டுக் கவிபாடுவார்.

கடவுள் வாழ்த்திற்குப் பிறகு வான்சிறப்புப்பாடிய திருவள்ளுவரும், கடவுளின் கருணையை உலகம் கண்கூடாகக் காண்பதற்கு மழையே சான்றுதலை மனம் கொண்டவரே எனல் மிகையாகாது. அண்மையில் பெய்த மழை ஆழ்ந்த தெய்வ நம்பிக்கை உடையவர்க்கு ஆண்டவனின் கருணை இன்றும் வெளிப்பட்டு வாழ்விக்கின்றது என்பதை உலகம் அறிந்திட உறுதுணையாயிற்று.

இவ்வுண்மையை எந்நாளும் மறவாது போற்றி, அவனருட் பெருங் கருணையைப் பெற மனம்கனிந்த வழிபாடுகளைச் செய்து உலகம் இன்புறுமாக.

உ

குருபாதம்

மாயூரம் அன்பநாதபுரம் வகையார் அறத்துறைத்
திருமண மண்டபத்தில்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
26 ஆவது குருமகாசந்நிதானம்

## ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

மாயூரம் தெய்வத் தமிழ் மன்றத்தின் சார்பில் நிகழ்ந்த
ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் நினைவுநாள் விழாவைத்
தொடங்கிவைத்துத் திருவாய் மலர்ந்தருளிய

# ஆசியுரை

6—11—1974

### தெய்வத் தமிழ் மன்றம் :

இந்தத் தெய்வத் தமிழ் மன்றம் நான்கு ஆண்டுகளாகச் சிறப்புடன் பணியாற்றி வருகின்றது. மாதந்தோறும் சமய இலக்கியச் சொற்பொழிவுகளை நடக்திச் சைவ சமய இலக்கியப் பணிகளைச் செய்துவருகின்றது. டாக்டர்கள், வழக்குரைஞர்கள், என்ஜினியர்கள், வணிகப்பெருமக்கள் மற்றும் பல பண்புடைப் பெருமக்கள் இம்மன்றத்தில் அங்கம் வகித்துப் பயன் பெருக்கி வருவது பாராட்டிற்குரியதாகும்.

### கயிலைக் குருமணி நினைவுநாள் விழா :

இம்மன்றத்தில் தருமையாதீனத்தின் இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானமாக எழுந்தருளியிருந்து இறைவன் திருவடி நீழலை எய்திய ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணியின் மூன்றுவது ஆண்டுக் குருபூசை விழாவைக் கொண்டாடுவது மகிழ்ச்சிக்குரியது. நாளை தருமை ஆதீனத்தில் உள்ள குருமூர்த்த ஆலயத்தில் கயிலைக் குருமணி அவர்களுக்கு வைதிக முறையில் குருபூஜை விழா நிகழ உள்ளது. இன்றும் நாளையும் மாயூரம் தெய்வத்தமிழ் மன்றத்தில் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி நினைவு அறக்கட்டளை

உதவியால் தோத்திர சாத்திர மாநாடு நடைபெறுகிறது. பெரியவர்கள் நினைவுநாளில் 'அவர்கள் நமக்கு என்ன செய்தார்கள்? என்ன சொன்னார்கள்? அவர்கள் சொல்லியவற்றை நாம் எந்த அளவில் கடைப்பிடிக்கிறோம்' என்பவற்றை எண்ணிப் பார்க்க வேண்டுவது நம் கடமை. இத்தகுபெரியவர்கள் வாழ்க்கையை நாம் லட்சியமாகக்கொள்ள வேண்டும். சந்தானாசாரியர்கள், சமயாசாரியர்கள், குருமகாசந்நிதானங்கள் போன்ற சான்றோர்களின் திருநாட்களைக் கொண்டாடுவதனால் விளையும் நன்மைகள் நமக்கே தவிர அவர்களுக்கு இல்லை. "வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான்" என்று மணிவாசகர் கூறுவதுபோல அப்பெரியோர்களை வாழ்த்துவதனால் நாம் நல்ல வண்ணம் வாழலாம் என்ற நினைவு மக்களுக்கு வருதல்வேண்டும்.

## தோத்திர சாத்திர மாநாடு :

இன்று நாம் வழிபடும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் இலட்சிய வாழ்வு வாழ்ந்த அருளாளராக விளங்கினார்கள். அவர்கள் தம் வாழ்நாளில் திருக்கோயில் திருப்பணிகளை — பல கும்பாபிஷேகங்களை நடத்தியும், மிகப்பெரிய தலயாத்திரைகளைச் செய்தும், திருமுறைகளையும் சாத்திரங்களையும் வெளியிட்டும் அருள் நலம் பெருக்கினார்கள். இன்று அவர்களுக்கு மிக உகந்ததாகிய தோத்திர சாத்திர மாநாடு இம்மன்றத்தில் நிகழ்கிறது. சமயாசாரியர்களும் சந்தானாசாரியர்களும் உலகம் வாழ உயரிய அருள் நூல்களை நமக்கு வழங்கியுள்ளார்கள். அத்தகைய நூல்களை இன்றும் நாளையும் சிந்திக்கும் வாய்ப்புத் திருவருளால் ஏற்பட்டுள்ளது. தோத்திரத்திற்கு முதலாசிரியராக விளங்கியது மூன்று வயதுக் குழந்தை; சாத்திரத்திற்கு முதலாசிரியராக விளங்கியதும் இரண்டு வயதுக் குழந்தையே.

தோத்திரத்திற்கு முதலாசிரியராகிய ஞானசம்பந்தர் நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பிய சிறிய பெருந்தகையார் ஆவர். தமிழ் என்றாலே தெய்வநலம் கமழ்வது என்றே பொருள். தமிழ் சமயத்தோடு பின்னிப் பிணைந்து விளங்குவது; தெய்வமணம்கமழ்வது. ஆதலின் பழங்காலத்தில் தமிழ்ப்புலவர்கள் என்றாலே கடவுள் நெறியைப் பின்பற்றுபவர்கள் என்றே கருதப்பெறுவர். சுந்தரமூர்த்தி சுவாமிகளும் 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்' என்று ஓதுவது தமிழுக்கும் தெய்வத்திற்கும் உள்ள திருவருட் பிணைப்பையே காட்டுவதாக உள்ளது. தமிழுக்குரிய அடைமொழிகளில் 'தெய்வத்தமிழ் என்ற சிறப்பான அடைமொழியும் இதனைக்காட்டும். சேக்கிழார் பெருமானும்

“ ஞாலம் அளந்த மேன்மைத் தெய்வத்தமிழ் ” என்று சிறப்பிக்கப் பெறுகிறது. தமிழ் நூல்களில் தெய்வமணம் இல்லாத நூல்களே இல்லை என்று சொல்லிவிடலாம். நம்மொழியில் அமைந்த தோத்திர சாத்திர நூல்கள் இலக்கிய இலக்கணமாக — தமிழின் இருகண்களாக விளங்குவன.

தோத்திரம் அன்பையும் சாத்திரம் அறிவையும் வளர்க்கும். தோத்திரங்களாகிய திருமுறைகள் 12. இவற்றை அருளிச்செய்தவர்கள் இருபத்தெழுவர். சாத்திரங்கள் பதினான்கு. இவற்றை அருளிச்செய்தவர்கள் அறுவர். இவர்கள் அருளிய அருள்நூல்களாக விளங்கும் இத்தோத்திர சாத்திரங்களை மக்கள் அறிந்து கடைப்பிடித்துப் பயனடையவேண்டும்.

## வள்ளுவர் கொள்கை :-

இன்றைய சமுதாயம் எதற்கெடுத்தாலும் பெரும்பான்மை வேண்டுமென்று கருதுகிறது. பெரும்பான்மையைப் பின்பற்றக் கூடாது என்று சொன்னால் பெரும்பாலோர் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். வள்ளுவர் பெயர்க்கு இப்போது ஒரு நல்லகாலம். வள்ளுவர் கொள்கையை மக்கள் பின்பற்றுகிறார்களோ ? இல்லையோ ? எல்லோரும் வள்ளுவரைப்பற்றிப் பேசுகிறார்கள். வள்ளுவரும்,

“ பண்புடையார்ப் பட்டுண்டுலகம் அது இன்றேல்
மண்புக்கு மாய்வது மன் ”

என்று கூறுகின்றார்

பண்புடையவர்கள் சிலராக இருந்தாலும் அவர்களால்தான் நாடு நலம் அடைகிறது என்பது இக் குறளின் கருத்தாகும். ஒரு சில நல்லவர்கள் இருப்பதால்தான் உலகம் நிலைபெறுகிறது. பெரும்பான்மையை வைத்து உலகம் நிலைபெறவில்லை என்பதைப் புறநானூற்று ஆசிரியர் ஒருவரும் பின்வருமாறு கூறியுள்ளமை கருதத்தக்கது :-

" தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே. ”

பழந்தமிழ்ச் சான்றோரும்,

" உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே ”

என்று கூறுவதைக் காணலாம். சீலத்தாலும் ஞானத்தாலும் தவத்தாலும் அறிவுப் பண்பாட்டாலும் உயர்ந்தவர்களையே உயர்ந்தோராகக் கொள்ள வேண்டும். அத்தகைய உயர்ந்தவர்களையே உலகம் பின்பற்றுகிறது; அவர்களாலேயே உலகம் நிலைபெறுகிறது. அவ்வுயர்ந்தவர்களை மனத்தில்கொண்டே ஔவையாரும்,

'நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை"

என்று கூறியுள்ளார்.

யாரால் மழை பெய்கிறதோ! உலகம் நிலைபெறுகிறதோ! அவர்களை ஒதுக்கிவிட முடியாது. நல்லவர்கள் சிறுபான்மையினராகத்தான் இருக்கமுடியும். பண்புடையவர்கள் சிலராக இருந்தாலும் அவர்களைத்தான் நம் முன்னோர்கள் புகழ்கின்றனர்; போற்றுகின்றனர்.

## நாடும் வீடும் நலம் பெற :

வள்ளுவரே நல்லோராகிய சிறுபான்மையினரைத்தான் பின்பற்ற வேண்டும் என்கிறார். இக்காலத்தில் சில தீமையான காரியங்கள் பெரும்பாலும் நடக்கின்றன. நல்ல செயல்கள் சிறுபான்மையாக நடக்கின்றன. எனவே பெரும்பான்மை என்பதற்காகத் தீமைகளை ஏற்றுக்கொள்ள முடியுமா? ஏற்றுக்கொள்ளத்தான் செய்வோமா? அல்லது சிறுபான்மை என்பதற்காக நல்லவைகளை ஒதுக்கிவிடுவோமா? எனவே பெரும்பான்மை சிறுபான்மை என்ற கண்ணோட்டத்தில் இராமல் நல்லவைகளைப் பின்பற்றி நாடும் வீடும் நலம் பெறப் பாடுபடவேண்டும்.

மாயூரத்தில் உள்ள மக்கள் இலக்கியத் துறையில் அறிவு வளம் பெற இம்மன்றம் அமைத்து அதை நன்முறையில் முன்னின்று நடத்தி வருகின்ற நம் அன்பர்களான மகாதேவன், டாக்டர் சுவாமிநாதன், இராசசேகரன் ஆகியோர்க்கும் இம்மன்றத்தின் வளர்ச்சியில் பங்குகொள்கின்ற அன்பர்களுக்கும் நல்லன எல்லாம் பெருகுக என்று செந்தமிழ்ச் சொக்கலிங்கப் பெருமான் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

# நடராசப் பெருமான்

திருமுறைக்கலைஞர்
வித்துவான். திரு. தி. பட்டுச்சாமி ஓதுவார்

" பொன்னம் பலவன் பொற்கழல் பணிவார்க்கு
இன்பமும் வீடும் எளிதினில் வருமே "

— தனிப்பாடல்

**தோற்றுவாய் :**

ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெருஞ் சோதியாய், மனவாக்குக் காயங்களுக்கு எட்டாத பரம்பொருளாய் குணம் குறிகள் இல்லாததாய், ஒன்றாய் நித்தமாய், ஆனந்த வடிவாய், எங்கும் நிறைந்து விளங்குவது - பரமசிவம் – பரசிவம் – சச்சிதானந்த சிவம் – நின்மலசிவம்.

இந்நின்மல சிவத்தின் வல்லமையே சத்தி எனப்படும். அஃது அருட்சத்தி – சிவசத்தி எனப் பெயர் பெறும். இச்சத்தி, சூரியனின் கிரணம் போலவும், மணியின் ஒளிபோலவும் சிவத்துடன் ஒற்றுமைப்பட்டு இருக்கும். இந்த அருட்சத்தியினின்று பராசத்தி, ஆதிசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி என்ற ஐந்து சத்திகள் ஒருவரிலிருந்து ஒருவர் தோன்றுவர்

பரமசிவம் - நின்மலசிவம், தம்மை மெய்யன்புடன் நினைக்கும், பூசிக்கும், துதிக்கும் (வழிபடும்) அன்பர்களுக்கு அருள் பாலிக்கும் பொருட்டு ஞான சத்தியுடன் பொருந்தி அருவ வடிவாகவும், ஞானசத்தியும் கிரியா சத்தியும் சமமாகப் பொருந்தி அருவுருவ வடிவாகவும் ஞானசத்தி குறைந்து கிரியா சத்திமிக்குப் பொருந்தி உருவ வடிவாகவும் விளங்குவார்

அருவசிவம் சிவம் எனவும், லயசிவம் எனவும், நிட்கள சிவம் எனவும்; அருவுருவ சிவம் சதாசிவர் எனவும், போக சிவம் எனவும், சகள நிட்கள சிவம் எனவும்; உருவ சிவம் மகேசுவரர் எனவும், அதிகார சிவம் எனவும், சகள சிவம் எனவும், பெயர் பெறுவர்.

சிவன், சதா சிவர், மகேசுவரர் இம் மூவருக்கும் தம்முள் சிறிதும் பேதமில்லை. சதாசிவர் சிவலிங்க மூர்த்தியாவர்.

மகேசுவரர், சந்திரசேகரர், சோமாஸ்கந்தர், நடராசர், கஜ சம்மாரர் முதலிய இருபத்தைந்து மூர்த்தியாவர். இம்மகேசுவர மூர்த்திகள் யாவரும் சதாசிவ மூர்த்தியின் - சிவலிங்க மூர்த்தியின் அம்சத்தையும், * படைத்தல், காத்தல் முதலிய ஐந்தொழில் அதிகாரத்தையும் பெற்று விளங்கும் அதிகார சிவம் ஆவர்.

இவ்வதிகார சிவத்தில் எவரேனும் ஒரு மூர்த்தி சிவாலய உற்சவாதி காலங்களிலும், பிற விசேடங்களிலும் சிவலிங்கப் பெருமானின் பிரதிநிதியாக வீடு முதலியவற்றிற்கு எழுந்தருளி வருவர் எனச் சிவாகமம் கூறும்.

மகேசுவர மூர்த்திகளில் அம்மையாரோடு எழுந்தருளிய போகமூர்த்திகளில் நடராசப்பெருமான் ஒருவர். இந் நடராசப் பெருமானின் (ஆட வல்ல பெருமானின்) தத்துவச் சிறப்பு ஒரு பெருஞ் சிறப்பாம்.

## நடராசரின் திருவுருவம் :

விரித்த (அல்லது முடித்த) சடையும், சிரசில் கங்கை, பிறைச் சந்திரன், பாப்பும், திருமுகத்தில் முக்கண்ணும், குமிண் சிரிப்பும், திருச்செவிகளில் குண்டலமும் கந்தருவனும், நான்கு திருக்கைகளும் அவற்றுள் மேல் வலமிடம் தூக்கியதிருக்கைகளில் முறையே உடுக்கையும், அங்கியும், கீழ் வலக்கை அபயமும், கீழ் இடக்கைகீழே தொங்கவைத்துக் குறுக்காக வலப்புறம்வீசிநீட்டித் தூக்கிய திருவடியைச் சுட்டிக்காட்டியும், முயலகன் முதுகின்மீது ஊன்றிய வலத்திருப்பாதமும், தூக்கிய இடத்திருப்பாதமும், ஓங்காரவடிவமாகிய சுடர்க் கொழுந்து விளங்கும் திருவாசியும் உடையவராய் விளங்கும் மூர்த்தி நடராசப்பெருமான் ஆவர்.

---

* சிவலிங்க மூர்த்தியின் ஈசான முகத்தின் அம்சத்தைப் பெற்றவர் : சோமாஸ்கந்தர், நடராசர், இடபாரூடர், சந்திரசேகரர், கலியாணசுந்தரர் என்போர்.

தற்புருட முகத்தின் அம்சத்தைப் பெற்றவர்: பிட்சாடனர், காமாரி, காலாரி, சலந்தராரி, திரிபுராரி என்போர்.

அகோர முகத்தின் அம்சத்தைப்பெற்றவர். கஜசம்மாரர், வீரபத்திரர், தட்சிணாமூர்த்தி, கிராதர், நீலகண்டர் என்போர்.

வாமதேவ முகத்தின் அம்சத்தைப் பெற்றவர் : கங்காளர், சக்ரதானர், கஜமுகானுக்கிரகர், சண்டேசானுக்கிரகர், ஏகபாதர் என்போர்.

சத்தியோசாத முகத்தின் அம்சத்தைப் பெற்றவர். இலிங்கோற்பவர், சுகாசீனர், உமாமகேசுவரர், அரியத்தர், அர்த்தநாரீசுவரர் என்போர். ஆக 25 மகேசுவரமூர்த்திகள் ஆவர்.

நடராசப்பெருமானுக்குப் பெரும்பாலும் நான்கு திருக்கைகளே அல்லாமல், சில நடராசமூர்த்திக்கு எட்டு, பத்து, பதினறு திருக்கைகளும் உள்ளன.

முயலகன் கீழ் அமைந்த தாமரைப்பீடம் பதினறு இதழ்களை உடையது; அஃது இருதய தாமரையினை நினைவூட்டுவது. அத்தாமரைப் பீடத்தின்மேல் மிதியுண்டு கிடக்கும் முயலகன் என்பவன் ஒரு பூத வடிவினன். அவனைச் சிவாகமங்கள் அபஸ்மாரம் என்று கூறும். சில நடராசரின் பாதத்தில் முயலகன் இல்லை; ஆனல் பாம்பு மட்டும் உள்ளது.

அந்த முயலகன் மெல்லத் தலை நிமிர்ந்து திருகலாகவும் பரட்டை மயிரும் கோறைப்பற்களும் உருட்டிய - பிதுங்கிய - விழிகளும், உடல் வேறு விதமாகத் திருகலாக இருக்கவும், கையில் பிடித்த பாம்புடன் விளங்குகிருன். (தொடரும்)

---

## மதுரையில் ஸ்ரீ சொக்கநாதர் வழிபாடு

தண்ணர் தமிழளிக்கும் தண்பாண்டி நன்னாட்டில் தருமையாதீன ஆன்மார்த்தமூர்த்தியாகிய ஸ்ரீ சொக்கநாதப்பெருமான் அருள்வழங்கும் மதுரை ஸ்ரீ மீனாட்சிசுந்தரேசுவரர் திருக்கோயிலுக்கு 8—1—75 அன்று தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி ஸ்ரீ மீனாட்சியம்மைக்கும் ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகளும், சகஸ்ர நாமார்ச்சனையும் நிகழ்த்துவித்து நூற்றெட்டு வெண்பொற்காசுகளால் அஷ்டோத்திரமும் செய்வித்தார்கள். அஷ்டோத்திர அர்ச்சனை செய்யும்போது சுவாமிக்கு வெண்பொற்காசுகளோடு வில்வமும், அம்பாளுக்கு ரோஜாமலரும் சேர்த்து அர்ச்சனை செய்வித்து வழிபாடாற்றினர்கள். மதுரைத் திருப்பதிகங்கள் வழிபாட்டின்போது பாராயணம் செய்யப்பெற்றன. வழிபாட்டிற்கு வந்திருந்த மதுரை நகரப் பெருமக்களுக்கும் பக்தர்களுக்கும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஆசி அருளி ஸ்ரீ சொக்கநாதப்பெருமான் திருவருட் பிரசாதம் வழங்கியருளினர்கள். சிவதர்மபாஸ்கர. பிர்மஸ்ரீ ம. க. சுந்தரேச பட்டர் அவர்களும், அறங்காவலர் குழுத் தலைவர் திரு. பொன்னப்பன் அவர்களும், நிர்வாக அதிகாரி திரு. இராமச்சந்திரன் அவர்களும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை வரவேற்று உடனிருந்து வழிபாடு செய்வித்தார்கள். அஷ்டோத்திரம் செய்விக்கப்பெற்ற வெண்பொற்காசுகளை திருக்கோயில் அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் வழங்கியருளினர்கள்.

# பொங்கல் வாழ்த்து

## (புலவர். திரு. இரா. செல்வக்கணபதி)

பரங்கருணைத் தடங்கடலின் அருளே பொங்க,
பாரெல்லாம் அடியார்கள் பக்தி பொங்க,
கரங்கூப்பும் மகளிர்க்கும் வாழ்வு பொங்க,
கடிதுழைத்த மாட்டுக்கும் பொங்கல் பொங்க,
திறங்கொண்ட உழைப்புக்குப் பயனும் பொங்க,
திருநாட்டில் நதிபொங்க, மழையும் பொங்க,
உரங்கொண்ட நெஞ்செல்லாம் அன்பு பொங்க
ஓடிவரும் தைப்பாவாய்! வருக! வாழ்க!!

புத்தாண்டில் வருகின்ருய் அடியார்க் கெல்லாம்
பொய்யாது வழங்கிடுக! நெஞ்சத் தெல்லாம்
கொத்தான அன்போடு வணங்கும் அன்பர்
குலம்வாழ வழிகாட்டு! உழைப்பும் அன்பும்
எத்திக்கும் வளர்ந்தோங்க, ஏழை வாழ்வில்
எழுச்சிக்கு உளங்கொள்ளு; பொங்கல் பொங்கி
தித்திக்க உண்டாடும் வாழ்வை என்றும்
திருநாடு பெறுதற்கு வழியே காட்டு!

## சிதம்பரத்தில் ஸ்ரீ நடராஜப்பெருமான் வழிபாடு

மார்கழி மாதத்தில் வரும் திருவாதிரைத் திருநாள் ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு உகந்ததிருநாள். "ஆதிரை நாள் காணுதே போதியோ பூம்பாவாய்" என்பது திருஞானசம்பந்தர் திருவாக்கு. 29—12—74 திருவாதிரை அன்று ஸ்ரீ நடராஜப் பெருமான் தரிசனத்திற்கு, ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி, லட்டு பாவாடை நிவேதனம் செய்வித்து வழிபாடாற்றிஞர்கள்.

1—1—75 ஆங்கில ஆண்டுப் பிறப்பு நாளாதலால் அன்றும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி ஸ்ரீ ரத்ன சபாபதிக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் செய்வித்து வழிபட்டு இவ்விருநாட்களிலும் வழிபாட்டிற்கு வந்திருந்த பக்தர்களுக்கும் அன்பர்களுக்கும் ஸ்ரீ நடராஜப்பெருமான் பிரசாதம் வழங்கி ஆசியருளினர்கள்.

# நந்திக் கதம்பம்

"நஜன்"

திருநந்திதேவர் பற்றிய சகல விவரங்களையும் தொகுத்து (பல மலர்களைக் கொண்ட மாலைபோல) அளிப்பதால் இக் கட்டுரைத் தொகுப்புக்கு நந்திக் கதம்பம் எனப் பெயரிடப் பட்டிருக்கிறது.

ஆலயங்களில் சிவசந்நிதிக்கு எதிரில் காணப்படும் விடை (ரிடபம்) வேறு; நந்திவேறு. ஆலயங்களிலுள்ள விடையையும் நந்தி என்று குறிப்பிடுவதால் இக்குழப்பம் நிலவிவருகிறது. இவ்விருவரும் வெவ்வேறானவர்கள். ஆகவே இக்கட்டுரைத் தொகுதியின் முதல் பாகத்தில் திருநந்தி தேவர் குறித்தும் இரண்டாவது பாகத்தில் ரிடபம் என்கிற தருமதேவதையைக் குறித்தும் பல அருமையான விவரங்கள் சேகரித்துக் கொடுக்கப் பட்டிருக்கின்றன.

## திருநந்திதேவர்

நந்தி என்ற வார்த்தைக்கு சந்தோஷமாக இருப்பவன் என்று பெயர். தானும் சந்தோஷமாக இருந்து பிறரையும் மகிழ் விப்பவர். 'நந்தி'யுடன் 'ஆ' முன்னால் சேர்த்தால் 'ஆனந்தி' என்றாகும். சந்தோஷம் என்பது நிலைத்திருப்பது அன்று. ஆனால் ஆனந்தம் என்றும் நிலைத்திருக்கக்கூடியது.

இறைவனுக்கே 'நந்தி' 'நம்பன்' என்கிற பெயர்களும் உண்டு. தேவர் என்பது நந்தியின் பெயர். தேவர்கள்என்றும் இளமையோடு இருக்கக்கூடியவர்கள். அமுதம் உண்டவர்கள். நல்லனவற்றைச் செய்து புகழுடம்பு பெற்றவர்கள். நந்திபெரு மான் இச்சிறப்புகளை எல்லாம் பெற்றவராதலால் தேவர் என்றும் அழைக்கப்படுகிறார்.

## நந்திபெருமான் பெருமை

" ஆதியிலும் திருநந்தி அறுதியிலும் திருநந்தி
வாதனையால் விளையாட வருமிடமும் திருநந்தி
தீதிலாத் திருநந்தி திகழ்பெருமை திசைமுகனார்
ஓதிடினும் அவர்க்குவாய் ஒருகோடி போதாவே "

என்ற பாடலால் அறியலாம். அவர் நம் பவம் அறுத்தவர் என்பதை,

" செம்பொரு ளாகம த்திறன் தெரிந்து
நம்பவ மறுத்தநம் நந்தி வானவன் "

என்று புகழப் படுகிறார்

## சாரூப முத்தி பெற்றவர்

முத்தி என்பது மூன்று வகைப்படும். பழி படு முத்தி, பத முத்தி, பர முத்தி. முத்தியல்லாதது பழிபடு முத்தி. படிப்படி யாக வருவது பதமுத்தி. எல்லாவற்றையும் கடந்தது சாரூப முத்தி. இஃது ஒரு குறையும் இல்லாதது. இதைப்பெற்றவர் நந்திதேவர்.

இவருடைய அங்கங்கள் குறித்து திருவையாற்றுப் புராணம்,

" மற்றிணையிலாக் கயிலை மலைநாதன், நந்திக்கு
நெற்றிக்கண் நாலுபுயம்
நெருப்புருவம் பிறை கொண்முடி
சற்றுமொரு குறையில்லாச் சாரூபம் பணித்தருளிப்
பெற்றியினால் அருட்சுரிகைப்
பிரம்பும் அருள் செய்தனனே "

என்று கூறுகிறது. சிவபிரானுக்குள்ளதுபோலப் பல சிறப்பு அம்சங்கள் நந்திகேசுவரருக்கும் உண்டு. அதனாலேயே ஈசுவரர் என்ற அடைமொழியும் அவருடையப் பெயருடன் சேர்க்கப்பட்டுள்ளது.

நெற்றிக்கண் ஆசையில்லாமையைக் காட்டுகிறது. ஆசையை உண்டாக்கவந்த மன்மதனை எரித்தது நெற்றிக்கண். நான்கு கரங்கள் தெய்வத்தன்மை யுடையவர் என்பதைக் காட்டுகிறது. நெருப்பின் நிறம் வெண்மை. நந்தியின் வடிவமும் வெண்மை.

இறைவன் அழல் வடிவினன். ஆகவே இறைவனின் அம்சமே நந்தி. நந்திகேசுவரருக்கு சந்திரனும் உண்டு.

நந்திகேசுவரர் ஒரு கையில் மழுவும், மற்ருெரு கையில் மானும் தரித்திருக்கிருர். இவ்விரண்டும் வேதத்தைக்குறிப்பன. வேதமாகிய மான்குட்டியைத் தாங்கியிருக்கிருர். மழு வீரத்தைக் காட்டும். மழு சம்ஹாரத்தின் சின்னம். இறைவனின் அழிக்கும் சக்தியை அது உணர்த்துகிறது. எல்லாவற்றையும் சம்ஹரிப்பவனே உண்டாக்கவும் வல்லவன்.

## அதிகார நந்தி

சம்ஹாரம் என்ருலே ஒய்வுபெறுதல். எல்லா ஜீவன்களையும் ஒரேகாலத்தில் ஓய்வுபடுத்துவதே மகாசம்ஹாரம். இந்த அதிகாரம் நந்திதேவருக்குக்கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்குச் சாட்சியாக அவருக்குப் பிரம்பும் அளிக்கப்பட்டுள்ளது. இதனைத் திருவையாற்றுப் புராணம்,

" வருநந்தி மிசைக்கொண்டு வானுலவுந் திரிபுரங்கள்
கருநந்தி விழநகைத்த கண்ணுதலோன் என்றுலகக்
குருநந்தி யையாறன் குலவுமுனி மைந்தனுக்கு
திருநந்தி தேவனென்று திருநாமம் சாற்றினனே "

என்கிறது. நந்தி என்பது தீக்ஷா நாமம்.

" யோசனைகள் பன்னிரண்டாயிர முள்ள திருமலையிற்
பேச்சரிய சாரூபம் பெற்ற கணநாதருக்கும்
பாசமில்லா சித்தருக்கும் பாரிடங் களானவர்க்கு
மாசின்மே லதிகாரம் ஐபன்ஈந்து அருள்செய்தான் "

என்று அவருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பதைக் கூறுகிறது. இத்துடன் ஆலயத்தின் காவலும் அவரிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது என்கிறது அப்புராணத்திலுள்ள மற்ருெரு பாடல் :-

" ஏழுமதில் புடைசூழ விருநான்கு வாயிலுக்கும்
வாழிய தன் றனைப்பணிய வருமடியார் யாவரையும்
சூழவருங்காலங்கள் அறிந்து விடுந்தொல் பணிக்கும்
ஆழிசூழ் புவித்தன் ஆலயத்தினுங் காவல்கொடுத்தான் "

என்று கூறுகிறது. இக்காவலின் திறத்தை மன்மதனின் சரித்திரம் விளக்குகிறது. யோகத்தில் இருக்கும் சிவபெருமான்மீது பாணத்தை எய்து அவரது யோகத்தைக் கலைக்கக் காமன் துணிந்தான். நந்தி 'ஊம்' எனவே அவன் பெருமூச்சு விட்டான். நந்தியின் காவலைக் கண்டதும் அவன் பயங்கொண்டான். இதைப் பெரியபுராணம்,

"நெற்றியிற் கண்ணர் நாற்பெருந்தோளர்
நீறணிமேனியர் அநேகர்
பெற்றமேல்கொண்ட தம்பிரான் அடியார்
பிஞ்ஞகன் தன்னருள் பெறுவர்
மற்றவர்க் கெல்லாம் தலைமையாம்
மலர்க்கையில் சுரிகையும் பணியும் பிரம்பும்
கற்றைவார் சடையான் அருளினால் பெற்றான்
காப்பதக் கயிலைமால் வரைதான்"

என்பதால் நந்தி, கோவில் காவல் பூண்டமை விளங்குகிறது.

இடும்பை நோய் ஓட்டும் ருத்திரன் என்று சிவஞானமுனிவர் கூறுகிறார். இப்பெயர் நந்திதேவருக்கும் பொருத்தமாகும். ஒரு காலத்தில் தேவர்கள் பிரும்மாவின் தலைமையில் சிவபெருமானிடம் சூரபன்மனைப்பற்றி முறையிடச் சென்றனர். பிரும்மா நந்திதேவரை நோக்கி,

"நந்தியெம் போதுகேள் நங்கள்பால் துன்பெலாம்
சிந்தை செய் திடுதி"

என்கிறார். நந்திதேவர் இதைக்கேட்டுப் பரிதாபப்பட்டு சிவபெருமானிடம் அழைத்துச் செல்கிறார். துன்பப்படுவதைக்கண்டு பரிதாபப்படுவது சான்றோர் இயல்பு. சிவபெருமான் உருத்திரர் எல்லோருக்கும் சாரூப முத்தியளித்திருந்தபோதிலும் நந்தி பெருமானுக்கு அளித்ததுபோல அதிகாரம் தரவில்லை. அதிகாரம் அடிக்கவும் அணைக்கவும்பயன்படுகிறது. பிரம்பு எதற்கு? சந்நிதானத்தை மறைப்பவர்களை அடிப்பதற்காக. அடிபட்டவரே ஆண்டவனை நினைப்பர்.

அதிகார நந்தியின் கம்பீரமான திருவுருவைக் காண விரும்பினால் சென்னை மயிலாப்பூர் கபாலீசுவரர் பிரும்மோற்சவத்தில் மூன்றாம்நாள் அதிகாலை அதிகார நந்தியைத் தரிசிக்கலாம்.

(தொடரும்)

# சமயச் சடங்குகளும் டி. கே. சியும்

நீதிபதி, கனம். எஸ். மகராஜன் பி. ஏ., பி எல்.,

( மலர் 34. இதழ் 1. பக்கம் 25 - இன் தொடர்ச்சி )

இவ்வாறு விளக்கம் கொடுத்துவிட்டு, சரஸ்வதியை வெண்தாமரை மலர்மேல் உட்கார்த்தி வைத்திருக்கிறோமே, அந்தச் சடங்கின் மர்மத்தை டி கே. சி சொல்லுகிறார்கள். 'பேரண்டத்திலுள்ள பொருள்களிலெல்லாம் சிறந்த பொருள் மனிதன். மனிதனிடத்தில் உள்ள பொருள்களிலெல்லாம் சிறந்தது மனசு. இத்தகைய அதி அற்புதமான பொருள்-மனசு எப்படி உற்பத்தியாயிற்று, ஏன் மற்ற ஜீவராசிகளிடத்துக் காணப்படுதல் இல்லை என்றெல்லாம் மக்களில் சிலர் எண்ண ஆரம்பித்தனர். ஜடப்பொருளான நம் உடலுக்குள் மனசின் தத்துவங்கள் ஒன்றொன்றாக வளர்ந்து தெளிவடைந்து பிரகாசிப்பதை நோக்கும் போது, இருள் மயம் என்று சொல்லக்கூடிய தண்ணீர்த் தடாகத்திலிருந்து முளைத்துஎழுந்து மலர்ந்தவெண் தாமரை மலர் ஞாபகத்துக்கு வருதல் இயல்பு. வெண்தாமரை ஒன்று பூப்பதில் எவ்வளவோ அற்புதம், எவ்வளவோ தெய்வீகத் தத்துவம். அப்படியே உள்ளுணர்வு முளைத்தெழுந்து வளர்ந்து பிரகாசிப்பதிலும் எவ்வளவோ அதிசயமும் தெய்வீகத் தத்துவமும் நிறைந்து கிடக்கின்றன. இத்தகைய கருத்துக்களிலிருந்து சரஸ்வதி என்ற தெய்வத்தை உள்ளத்தில் பாவனை செய்யவும், அத்தெய்வத்தைச் சமரசப்படுத்தி அந்த வெண்தாமரை மலரின் மீதே ஏற்றி வைக்கவும் ஏற்பட்டது. நாளாவட்டத்தில் வெள்ளைக் கலையும், வெள்ளைப் பணியும் அவளுக்குக் கிடைத்தன.'

இப்படியாக, சமயக் குறியீடுகளுக்கும், அடையாளங்களுக்கும், சடங்குகளுக்கும் டி. கே. சி. வியாக்யானம் கொடுப்பார்கள். பிறைச்சந்திரனையும், கங்கையையும் சிவன் தலைமேலே ஏற்றி வைத்ததற்குள்ள காரணங்களைத் தெளிவு செய்வார்கள்.

நடராஜ மூர்த்தியின் ஆனந்த நடனத்தை விளக்கிவிட்டு, அவர் காலடியிலே முயலகனை இடைச்செருகலாகச் செருகிவிட்டார்கள் பிற்காலத்தார் என்று சொல்லிக் கண்டிப்பார்கள்.

ஒரு மரப்பொந்து கிடைத்துவிட்டால் போதும். அதற்கு மாணிக்கவாசகர் ஒரு திருவிழாவே நடத்திவிடுவார் என்று சொல்லுவார்கள். மருத மரத்தைப் பார்த்தாராம் திருவாசக ஆசிரியர். அந்த மரத்தில் கடவுள்தத்துவம் நிறைந்திருப்பதை யுணர்ந்தார். மருத மரத்தின் காம்பீரியமும் தொன்மையும் அவருக்குக் கடவுளை ஞாபகப்படுத்தின. அதுவும், பொந்து விழுந்த மிகத் தொன்மையான மரமாக இருந்தது. ஆகையால் தான், பழமைக்கும் பழமையான பழம்பொருளை அது நினைவுறுத்தியது. உடனே பாடுகிறார்.

" அந்த இடைமருதில்
ஆனந்தத் தேனிருந்த
பொந்தைப் பரவிநாம்
பூவல்லி கொய்யாமோ !"

இப்படியாக, பொந்துக்கும், அறுகம் புல்லுக்கும் விழாக் கொண்டாடினார்கள் நம்முடைய மூதாதையர் என்பதை அடிக்கடி உணர்ச்சியோடு எடுத்துச் சொல்வார்கள் டி. கே. சி.

அவர்கள் மறைவதற்குச் சில நாட்களுக்கு முன் திருவாதிரை யன்று காலை 5-30 மணிக்கு, சித்திரசபையிலிருந்து வரும் நாதஸ்வர இசையைக் கேட்டுக்கொண்டே டி. கே. சி. எழுதிய ஒரு கடிதத்தைக் குறிப்பிட்டு இந்தக் கட்டுரையை முடித்து விடுகிறேன்.

கடிதம் கீழ்க்கண்டவாறு பேசுகிறது:— " இன்று இங்கே அழகாக திருவாதிரை உத்ஸவம். சித்திர சபையில் நடராஜ மூர்த்தி பச்சை சாத்தி எழுந்தருளுகிறார். நடனதீபம் எல்லாம் வெகு அழகாய் இருக்கும். பக்த கோடிகளுக்கு என்றே அருவி ஓடி வந்து திம்திம் என்று விழுந்து கொண்டிருக்கிறது. நடனத்துக்கான தாளத்துடன் விழுகிறது.

" அம்பலத்தில் ஆடுகின்றார்
பாங்கிமா ரே — அவர்
ஆட்டங்கண்டு நாட்டங்கொண்டேன்
பாங்கிமா ரே

இன்பவடி வாய்ச்சபையில்
பாங்கிமா ரே — நடம்
இட்டவர்மேல் இட்டம் வைத்தேன்
பாங்கிமா ரே.

கற்பனைஎல் லாம்கடந்தார்
பாங்கிமா ரே — என்தன்
கற்பனைக்குள் படுவாரோ
பாங்கிமா ரே
கல்மனம்எல் லாம்கரைப்பார்
பாங்கிமா ரே — மனம்
கரையார்என் அளவிலே
பாங்கிமா ரே"

மண்ணையும், விண்ணையும் சேர்த்து அனுபவிக்கிறார் இராமலிங்க சுவாமிகள்; பாடலும் விண்ணுக்கும் மண்ணுக்குமாய்த் துள்ளிப்பாய்கிறது.

சித்ரசபையிலிருந்து எழுந்தருளி கோயிலுக்குள் இறங்குகிறார் நடராஜப் பெருமானார். காலை 5-30 மணி. மேளவாத்தியம் கேட்கிறது."

## EXTRACT FROM THE VISITOR'S BOOK

Dharmapuram Adhinam
Sri Sattanathaswami Devasthanam, Sirkazhi.

An occasion was given to me to have a darshan of this temple. The temple is kept up in a very neat manner and the temple, Superintendent explains the matters in a dispassionate and attractive manner. The maintenance is an inceptive to Bakthi. I thank the Mahasinnidhanam for giving me this benevolence.

(S-d) R. Ramanathan,
Assistant Examiner, Temple Audit.

17—12—74.

# சிவஞானசித்தியார் தெளிபொருள் விளக்கம்

தருமையாதீனப் புலவர், சித்தாந்தக் கலைமணி

திரு. சி. அருணைவடிவேல் முதலியார்

( மலர் 33. இதழ் 7. பக்கம் 345 இன் தொடர்ச்சி )

கந்தம் வெம்மை கலந்தி டும்புனல்
கன்மம் என்செய்த தேன்றனை;
சந்த னம்தழல் சார நீர்இரு
தன்மை உற்றிடு மாறதோர்;
தந்த கன்மம் இரண்ட ணைந்து
தருமசு கத்தொடு துக்கமும்;
சிந்தி யாஎழு சீவன் உற்றிடும்
வேறு டற்கிலை தேறிடே. 46

## இதன் தெளிபொருள்

'நீர் சில பொழுது சந்தனத்தைச் சேர்ந்து மிக்க தண்மையையும், தீயைச் சேர்ந்து வெம்மையையும் உடையதாகின்றது. அவ்வாறு அவற்றைச் சேர்ந்து வேறு வேறு தன்மையைப் பெறுதற்குக் காரணமாக நீர் என்ன கன்மம் செய்தது' என்று நீ தடை நிகழ்த்தி, 'மேற்சொல்லியது இயற்கையே யாதல் போல, உயிர்கட்கு நற்பொருட் சேர்க்கை, தீப்பொருட் சேர்க்கைகள் காரணமாக வரும் இன்பத் துன்பங்களும் இயற்கையே யல்லது அவற்றிற்கு வேறு காரணம் இல்லை' என்று நீ கூறினால்,

'ஒரு தன்மையையே உடைய நீருக்கு மிக்க தட்பம், வெப்பம் என்ற இருதன்மைகள் மாறி வருதல், முறையே சந்தனமும், நெருப்புமாகிய காரணங்களாலல்லது, இயற்கையால் அல்ல என்பதை நீயே கூறினாய். அதுபோல, ஒரு தன்மையில் நிற்கின்ற உயிருக்கு இன்பமும், துன்பமும் மாறி வருதலும் காரணத்தாலல்லது, இயற்கை யாகாதன்றோ? அக்காரணங்கள் நல்வினை தீவினைகளே யாகும்.

இன்பத் துன்பங்கட்குக் காரணங்கள் நீருக்கு உளவாகிய சந்தனமும், நெருப்பும் போன்ற நற்பொருள் தீப்பொருள்களே காரணமாகலின், அவற்றிற்கு மேலும், 'வினை' என்பதொரு காரணம் வேண்டுவது எதற்கு எனின், சந்தனத்தாலும், நெருப்பினாலும் நீருக்கு வேறு வேறு தன்மைகள் உளவாயினும் அவற்றால் இன்பம், துன்பம் என்ற அனுபவங்களை நீர் அடைதல் இல்லை. ஆகையால் அவ்வனுபவங்கள் பற்றிய காரணமும் நீருக்கு இல்லை. ஆனால், உயிர்கள் நற்பொருளையும், தீப் பொருளையும் உடலின் மூலமாகச் சேர்கின்ற பொழுது அப் பொருள்களால் உளவாகும் மாறுதல்கள், நீர் சந்தனத்தையும், நெருப்பையும் சாரும்பொழுது உளவாகின்ற மாறுதல்போல வாளா உடலோடு ஒழியாது, உயிரை இன்பத் துன்ப அனுப வங்களில் மூழ்கச் செய்துபோகின்றன. ஆகையால், அவ்வனு பவத்திற்கு வேறு காரணம் உள்ளனவேயாம்.

## விளக்கம்

நீர் சந்தனத்தையும், நெருப்பையும் சார்ந்து வேறு வேறு தன்மையை யடைதல், இயற்கையேயல்லது 'வினையால்' என்றல் கூடாமைபோல உயிர் நற்பொருள் தீப்பொருள்களைச் சார்ந்து இன்பத் துன்பங்களை அனுபவித்தலும் இயற்கையே யல்லது; 'வினையால்' என்று கூறுதல் பொருந்தாது என்னும் உலகாயதயர் கூற்றினை,

'நீர் சந்தனத்தையும், தீப்பொருளையும் சார்தல்' என்னும் உவமை உயிரற்ற உடல் சந்தனத்தையும், நெருப்பையும் சார்த லுக்குப் பொருந்துமேயன்றி, உடம்பின் வழியாக உயிர் நற் பொருள் தீப்பொருள்களைச் சார்தற்குப் பொருந்தாது. ஏனெ னில் நீருக்கும், உயிரற்ற உடம்பிற்கும் நற்பொருள் தீப்பொருட் சேர்க்கையால் இன்பத் துன்ப அனுபவம் இல்லை. உயிருக்கு அப்பொருள்களின் சேர்க்கையால் இன்பத் துன்ப அனுபவங்கள் உண்டாகின்றன. அவ்வனுபவம் இயற்கையாய் விளைவன அல்ல; வினை காரணமாகவே விளைவன – எனக் கூறி மறுத்தார். 'உயிர் நீங்கிய உடம்பிற்கு இன்பத் துன்ப அனுபவம் இல்லை' என்பதை,

"காக்கை கவரில்என் ! கண்டார் பழிக்கில்என் !
பாற்றுளி பெய்யில்என் ! பல்லோர் பழிச்சில்என் !
தோற்பையுள் நின்று தொழிலறச் செய்தூட்டும்
கூத்தன் புறப்பட்டுப் போனஇக் கூட்டையே"

என்னும் திருமந்திரத்தாலும் அறியலாம்.

எனவே, 'உயிர்களால் அடையப்படுகின்ற நற்பொருள் தீப் பொருள்கள், குடம். ஆடை முதலியவைகளால் அடையப்படு கின்ற அத்தகைய பொருள்கள் அக்குடம் முதலியவற்றுக்கு யாதொரு பயனையும் தாராது வாளா கழிதல்போலக் கழியாது, இன்பத் துன்பங்களாகிய அனுபவங்களில் ஆழ்த்திப்போதலால், உயிர்களுக்குப் பொருள்களோடு உளதாகின்ற தொடர்பு குடம், ஆடை முதலியவற்றுக்குப் பொருள்களோடு உண்டாகின்ற தொடர்புபோல இயற்கையில் நிகழ்வதாகாது, 'வினை' என்னும் காரணத்தின்வழி நிகழ்வதேயாம்' என்பது கருத்தாயிற்று.

'தரும்' என்பது எச்சம். 'சுகத்தொடு' என்னும் ஒடு, எண் ஒடு. "சிந்தியா எழுதல்" என்றது, 'அறிந்து அழுந்து தல்' என்றவாறு. 'இரண்டு வினைகள் வந்து தருகின்ற சுகத் தையும், துக்கத்தையும் அவற்றை அறிந்து அவற்றில் அழுந்தும் தன்மையை உடையதாகிய அறிவுப் பொருளாகிய உயிரே அடையும்; அத்தன்மை இல்லாத சடப்பொருளாகிய உடம்பிற்கு இன்பமோ, துன்பமோ இல்லை; இவற்றை நுண்ணிதாக ஆராய்ந்து தெளிக' என்பது பின் இரண்டடிகளின் பொருள். எனவே, 'உயிர்களின் பொருட் சார்பிற்கு, நீர் சந்தனம் நெருப்பு இவற்றைச் சார்தல் உவமை யாகாது' என்பதாம். (16)

இன்பம் மேவி யிருந்து நீ, 'வினை
    இல்லை; இங்கியல்' பென்றிடில்,
துன்பம் எய்திடு வானென்? மற்றிது
    சொல்லி டாய்,சொல வல்லையேல்;
முன்பு செய்திடு கன்மம் என்றறி;
    கன்ம மும்முதல் வன்அறிந்து
அன்பி னல்உறு விக்கும் அப்பயன்;
    ஆங்க மைப்பொ டாதியே. 49

## இதன் தெளிபொருள்

நற்பொருள்களின் சார்பால் இன்பத்தை நுகர்ந்துகொண் டிருக்கும் பொழுது, அவ்வின்பச் செருக்கால், நீ, 'வினையாவது, வேறொன்றுவது' என்று இகழ்வையாயின், அவ்வின்பம் நிலைத்து நில்லாது இடையே யொழிந்து துன்பம் வந்து பற்றக் காரணம் என்னை? இதற்கு விடை சொல்ல உன்னால் முடியுமாயின் சொல்லுக.

[ இன்பத்திற்குக் காரணமாய் இருந்த பொருளை நீக்கவோ, துன்பத்திற்குக் காரணமான பொருளை வருவித்துக்கொள் ளவோ நீ விரும்பமாட்டாய் ஆகையால், இன்பப் பொருளின்

நீக்கத்திற்கும். துன்பப் பொருளின் அணுக்கத்திற்கும் காரணம் இவை என்பது உன்னால் அறிய வாராததேயாம் - என்றபடி ]

இனி அவை, 'காரணம் இன்றியே நீங்கின; வந்தன' என்றலும் பொருந்தாமையால், 'முற்பிறப்பிற் செய்த கன்மங்கள் ஊட்டிக் கழிந்தும், ஊட்டுதற்குவந்தும் நிற்றலே காரணம்' என்று துணிவாயாக.

இனி அக்கன்மங்கள் சடமாகலின், அவை தாமே வந்து பொருந்தமாட்டாமையின், இறைவனே உயிர்கள்மேல் வைத்த கருணை காரணமாக அவற்றிற்கு அக்கன்மங்களை அமைத்து, கன்மங்களின் பயனையும் சேர்ப்பிப்பான். இவ்வமைப்பும், சேர்க்கையும் காலத்திற்கு அப்பாற்பட்ட நிலையினவாம்.

## விளக்கம்

'இன்பத் துன்பங்கட்குக் காரணம் நல்வினை தீவினைகளே' என நிறுவியவர், அது வலியுறுதற்கு மேலும் சில விளக்கங்களைக் கூறினர் என்க. (17)

அநாதி யேல்அமை வின்றெ னின்,மலம்,
மாயை, கன்மம் அணுச்,சிவன்
அநாதி ; கன்மம் அணுக்கள் செய்ய
அறிந்து கன்மம் உடற்செயா ;
அநாதி காரிய மாம்உ டல்கள்
அசேத னம் ; அணை யாஅறிந்து
அநாதி ஆதி அமைக்க வேண்டும்
அமைப்பி னேடும் அநாதியே, 50

## இதன் தெளிபொருள்

'காலத்திற்கு அப்பாற்பட்ட நிலையினவற்றை இயற்கை எனல் வேண்டும் அல்லது ஒருவனால் அமைக்க செயற்கையாகக் கூறுதல் பொருந்தாது' எனின்,

ஆணவம், மாயை, கன்மம், உயிர், இறை ஆகிய இவை அனைத்தும் என்றும் உள்ள பொருள்கள் ஆதலின் இவை இயற்கையேயாம். ஆயினும், ஆணவம் உயிர்களின் அறிவை அடியோடு மறைத்து நிற்றலால், உயிர்கள் கன்மத்தைப் பொருந்திச் செய்யமாட்டா. கன்மம் சடமாகலின், அதுவும்

உயிரை வந்து பொருந்தி, அவற்றிற்கு உடம்புகளை ஆக்கித் தரமாட்டா. மாயையாகிய முதற் காரணத்தில் நுண்ணியவாய் விளங்காது கிடக்கும் காரியமாகிய உடம்புகளும் சடமேயாதலின், தாமே பருமையாய்த் தோன்றிவந்து உயிர்களை அடையமாட்டா. ஆகையால், மேற்கூறிய ஐந்து இயற்கைப் பொருள்களில் கன்மம் உயிர்களைப் பொருந்துவதும், அதன் விளைவாக உயிர்கட்கு உடம்பு முதலியவை உளவாக அவை இன்பத் துன்பங்களை நுகர்தலும் இறைவனாலே ஆவன ஆகலின், அவற்றை, 'அவனது செயல்' என்றல் பொருந்துவதேயாம்.

## விளக்கம்

இப்பாட்டினால், மேல், "ஆங்கமைப்பொடநாதியே" எனக் கூறியது பற்றி நிகழும் ஐயங்களை நீக்கியவாறு.

இவை மூன்று செய்யுளாலும், மேல் (17) "கன்மம் உண்டு என்று செப்புதல் என்னே" என அவர் கூறியதை மறுத்தார். (18)

( தொடரும் )

---

கடிதம் :

ஸ்ரீ பழனியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரி பழனி.

Prof. N. Sarojini Devi, M. A,
PRINCIPAL,
Sri Palaniandavar Arts College, 22—11—74.
FOR WOMEN, Palni.

* * * * இறைவன் திருவருளாலும் தங்களுடைய அன்பான ஆசியாலும் நலமுடன் எங்கள் இருப்பிடம் வந்துசேர்ந்தோம்.

"செவிக்குண விலாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப்படும்"

என்பது வள்ளுவம். ஆனால் இன்றைய 'மனித தத்துவத்தை' உணர்ந்துதானோ என்னவோ அறுசுவை உண்டியைத் தங்களுடைய அன்பில் கலந்து வழங்கியபின், செவிக்கினிய - சிந்தனையைத் தூண்டக்கூடிய உள்ளத்தை வளர்க்கும் அறிவுரைகளையும் வழங்கினீர்கள். தங்களின் செழுமையான கருத்துக்களால் சிந்தை மலர, செவிகுளிர, நிறைந்த உள்ளத்தோடு மீண்டோம். * * * *

பணிவன்புடன்
ந. சரோஜினிதேவி.

# கல்வித் திட்டத்தில் கடவுள் அறிவு தேவை*

**இந்தியக் குடியரசு உதவி ஜனாதிபதி**

**மாண்புமிகு. திரு. பி டி. ஜட்டி அவர்கள்**

நான் கூறும் கல்வி முறை நம்நாட்டில் தெய்வ நம்பிக்கையைத் தன்னுள்கொண்டு அடையவேண்டும் என்பதைக் கூறவிரும்புகிறேன். தெய்வ நம்பிக்கை அறிவுத்திறனைவிட பரந்தது; ஆழ்ந்தது. சரித்திரத்தில் பல நிகழ்ச்சிகளின் காரணமாக நமது வாழ்க்கையில் தெய்வ நம்பிக்கை பொய்த்து விடவில்லை. இந்த அடிப்படை உணர்வுகளை மாணவர்களிடையே வளர்க்க முயற்சி செய்ய வேண்டும். இந்த உணர்வுகள் ஆண்டாண்டுக் காலமாக நம் கலாசாரத்தில் ஒன்றியுள்ளன. இவை நமது மக்களின் வாழ்க்கையிலும், மற்றவர்களுடனும் அவர்கள் கொண்டுள்ள உறவுகளிலும் சேவை மனப்பான்மையை வளர்க்க உதவுகின்றன

"மனிதர்களிடையே சமுதாயநீதியும் சமத்துவமும் இன்னும் கனவுகளாகவே இருக்கின்றன வென்றால் அதற்குநாம் பாரதக் கல்வியை முழுதும் புரிந்துக்கொள்ளாததுதான் காரணமாக இருக்கும். பாரதக்கல்வி ஒற்றுமை, சகிப்புத்தன்மை, ஒழுக்கம், சகோதர மனப்பான்மை ஆகியவற்றை வலியுறுத்துகிறது. மதத்தைச் சுத்கப்படுத்தி, ஆத்மாவுக்கு உணவாக்கி அளிக்க கல்வியால் முடியும். அதேசமயம் மதம் கல்வியைப் புனிதமாக்கி, அதற்கு ஒரு விசேஷ மதிப்பை அளிக்க முடியும். இந்த நிலையை அடைய ஆசிரியர்களும், மாணவர்களும் தொடர்ந்து முயற்சி செய்யவேண்டும். நன்றி

— சுதேசமித்திரன் 31—12—74.

---

* ஆக்ராவில் 49 ஆவது அகில இந்தியக் கல்வி மாநாட்டைத் தொடங்கி வைத்தபோது இந்தியக் குடியரசின் உதவி ஜனாதிபதி அவர்கள் ஆற்றிய உரை.

# திருத்தொண்டத் தொகைத் திறன்

தருமையாதீனத் தமிழ்ப் புலவர், செஞ்சொற்கொண்டல்,
டாக்டர். திரு. சொ. சிங்காரவேலன் எம்.ஏ., பிஎச். டி.

(மலர் 34. இதழ் 1. பக்கம் 21 இன் தொடர்ச்சி)

**அடியார்களைச் சுட்டும் முறைகள் :**

(1) இனி, திருத்தொண்டத் தொகையிற் கூறப்பெற்றுள்ள பொருளமைதிச் சிறப்பினை ஆராய்தல் ஏற்ற ஒன்றாகும். நாயனார் சில அடியார்களைக் கூறுமிடத்துப் பெயர்களை மட்டும் குறிப்பிட்டுச் செல்கின்றார்.

"ஏனாதிநாதன்றன் அடியார்க்கு மடியேன்"

"முருகனுக்கும் உருத்திரபசுபதிக்கு மடியேன்"

"திருக்குறிப்புத் தொண்டர்தம் அடியார்க்கு மடியேன்"

"பெருமிழலைக் குறும்பற்கும் பேயார்க்கு மடியேன்"

"ஏயர்கோன் கலிக்காம னடியார்க்கு மடியேன்"

"கலியன், கழற்சத்தி வரிஞ்சையர்கோன் அடியார்க்கு
[மடியேன்"

"ஐயடிகள் காடவர் கோனடியார்க்கு மடியேன்"

"காரிக்கு மடியேன்"

"நேசனுக்கு மடியேன்"

என்ற இடங்களில் இம்முறையைக் காணலாம்.

(2) சிவ திருத்தொண்டர்களை அவர்கள் வாழ்ந்த ஊரோடு சார்த்தி உரைக்கும் வேறொரு முறையினையும் நம்பியாரூரர் பின் பற்றிடக் காண்கின்றோம்; அதற்கு எடுத்துக் காட்டுக்களாகப் பின்வரும் இடங்களைச் சுட்டலாம்.

" இளையான் றன் குடிமாறன் "

" விரிபொழில் சூழ் குன்றையார் விறன்மிண்டர் "

" கடவூரிற் கலயன் "

" அலைமலிந்த புனல் மங்கை ஆனாயன் "

" ஒலிபுனல் சூழ் சாத்தமங்கை நீலநக்கன் "

" அம்பரான் சோமாசி "

" செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டன் "

" கடற்காழிக் கணநாதன் "

" பொழிற் கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழன் "

" விரிதிரை சூழ் கடனாகை யதிபத்தன் "

" தொன் மயிலை வாயிலான் "

" தஞ்சை மன்னவனாம் செருத்துணை "

" திருவாரூரிற் பிறந்தார்கள் "

" நின்றவூர்ப் பூசல் "

(3) இனி, சிவ திருத்தொண்டர்களைக் கூறு மிடத்து அவர்கள் செய்தருளிய செயற்கருஞ் செயல்களை நினைவுறுத்தும் அடைமொழிகளைப் புணர்க்கும் மற்றொரு முறையும் ஆரூரரால் மேற் கொள்ளப்பட்டுள்ளது. இதற்குப் பின்வரும் இடங்களைத் தக்க காட்டுக்களாகக் குறிக்கலாம்.

" இல்லையே என்னாத இயற்பகை "

" வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருள் "

" மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமான் "

" வார்கொண்ட வனமுலையாள் உமைபங்கன் கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியன் "

" சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலி "

" கார் கொண்ட கொடைக்கழறிற் றறிவார் "

" கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண்டிருந்த
கணம்புல்ல நம்பி "

" நிறைக் கொண்ட சிந்தையான் நெல்வேலிவென்ற
நின்றசீர் நெடுமாறன் "

" அறைக் கொண்ட வேனம்பி முனையடுவான் "

" பொன்னடிக்கே மனம் வைத்த புகழ்த்துணை "

" தென்னவனாயுல காண்ட செங்கணார் "

(4) சிவ திருத்தொண்டர்களைக் குறிப்பிடுங்கால் அவர்கள் தோன்றியருளிய இனத்தைச் சுட்டிக் கூறும் ஒரு முறையும் இப் பதிகத்துக் காணப்படுகின்றது;

" தில்லைவாழ் அந்தணர் ", " திருநீலகண்டத்துக் குயவனார் " " அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதி " (முல்லை மாலைக்குறிப்பு அந்தணரைக் குறித்த தாகலாம்) " களந்தைக் கோன் ", (கோன்-அரசன்) " புகழ்ச் சோழன் ". " வரிஞ்சையர் கோன் ". " ஐயடிகள் காடவர் கோன் ", " காடவர் கோன் கழற்சிங்கன் ", " தஞ்சை மன்னவனாம் செருத்துணை ", " மன்னியசீர் மறை நாவன் நின்றவூர்ப் பூசல் ". " தென்னவனா யுலகாண்ட செங்கணார் ", திருநீலகண்டத்துப் பாணனார் " ஆகிய இடங்களை இந் நோக்கிற் கண்டு இன்புறலாம். இவற்றுட் சில குறிப்பாகவும், ஏனைய வெளிப்படையாகவும் இனம்சுட்டி நிற்கும் இடங்களாக இலங்குகின்றன.

(5) சிவ திருத்தொண்டர்களைக் குறித்து, அவர்களுக்கு மட்டும் அடிமை செய்வேன் என்று குறியாமல், அவர்களது அடியார்க்கும் அடிமை செய்வேன் என்று குறிப்பிடும் முறை ஒன்றையும் இப்பதிகத்துக் காண நேர்கின்றது. " தில்லை வாழந்தணர் ", " இளையான் குடிமாறர் ", " கலயர் ", " வாட்டாயர் ", " திருக் குறிப்புத் தொண்டர் ", " திருநாவுக்கரையர் " " அப்பூதி ", " நமிநந்தி ", " சம்பந்தர் ", " ஏயர்கோன் கலிக்காமர் ", " திருமூலர் ", " கணநாதர் ", " சத்தி ", " ஐயடிகள் காடவர் கோன் ", " நெடுமாறர் ", " வாயிலார் ", " கழற்சிங்கன் ", " செருத்துணை ", " பரமனையேபாடுவார் ", " அப்பாலுமடிச் சார்ந்தார் " ஆகிய தனியடியார் தொகையடியார்களைக் குறிக்கும் போது இம்முறையை நம்பியாரூரர் மேற்கொண்டுள்ளனர். இதற்கான காரணம் யாதேனும் உண்டோ என்பது ஊன்றி உணர்தற்குரியது.

## ஆளுடைய பிள்ளையார் - அரசுகள் :

சைவ சமயப் பெருந்தலைவர்களாய் விளங்கிய ஞானாசிரியப் பெருமக்கள் இருவரையும் மிகச் சீரிய அடைமொழிகளைத் தந்து

பக்தி உணர்வுடன் நம்பியாரூரர் குறிப்பிட்டுள்ளமை அறியத் தக்கது.

" திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரையன்றன் அடியார்க்கு மடியேன் "

" வம்பரு வரிவண்டு மணநாற மலரும்
மதுமலர் நற்கொன்றையான் அடியலாற் பேணா
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்குமடியேன் "

ஊன்றி நோக்கினால், இவ்விரிடங்களிலும், இவ்விருவரது திருவாக்கில் ஈடுபட்டு நின்றே இவ்வடை மொழிகளைச் சுந்தரர் கூறியருளினர் என்பது இனிது புலனாகும். "கைச்சிறு மறியவன் கழலலாற் பேணாக் கருத்துடை ஞானசம்பந்தன்" என்று (1-77-11) திருஞானசம்பந்தரே தம் திருக்கடைக்காப் பொன்றிற் குறிப்பிட்டுள்ளனர். இதனை உளங்கொண்டதே இத்திருத்தொண்டத் தொகை வரிகளின் அமைப்பு என்பது உணரத்தக்க உண்மையாகும். 'சிவனெனும் ஓசை' என்று தொடங்கும் திருப்பதிகத்தில் "திருநின்ற செம்மை" என்ற தொடரை அப்பரடிகளார் அருளுவர், அதில் ஈடுபட்ட சுந்தரர், திருநாவுக்கரசரைக் குறிக்கும்போது நினைவு கூர்ந்து அதனை அமைக்கின்றார். திருநாவுக்கரசர் வாழ்வு, உலகியலைப் பெரிதாக மதியாத உயர் வாழ்வு; விலை உயர்ந்த பொன்னையும் பொருளையும் வெறுத்து ஒதுக்கிய வீர வாழ்வு; அருளையும் அன்பையுமே மதித்த மான வாழ்வு; சிவபெருமானையே திருநின்ற செம்மையாகப் போற்றி வழிபடும் புனித வாழ்வு; பேரின்பப் பெருநெறியைப் பற்றிக் கொண்ட பெருவாழ்வு என்பது கருதியே நம்பி ஆரூரர் இவ்வழகிய தொடரை எடுத்தமைத்தனராதல்வேண்டும். இவ்வாறே திருஞானசம்பந்தர் திருவுள்ளத்தின் தனிச் சிறப்பை, அவ்வருளாளரது பல்வேறு பதிகங்களின் வழி உணர்ந்து, 'சிவபிரான் திருவடியன்றி வேறு பிறவற்றைப் பேணாத', எம்பிரான் என்று ஓதியுள்ளமை உணரத்தக்கது.

( தொடரும் )

# திருப்பள்ளி எழுச்சி

டாக்டர். திரு. C. சீனிவாசன் M. Sc., Ph. D.,
F. B. B. S. (Lond), M. I. A. B. (Utrt).

தமிழ் நாட்டில் அரசர்களைத் துயில் எழுப்புவதற்குப் பாடும் பண்டைய மரபு ஒன்று உண்டு. அதற்குத் துயிலெடை நிலை என்று பெயர். "திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேன்" என்பார் ஆழ்வார். அதனைல் அரசர்களைத் துயில் எழுப்பப் பாடுவது போலவே தெய்வத்திற்குத் திருப்பள்ளி எழுச்சி பாடும் வழக்கமும் இருந்ததுபோலும். சமய இலக்கியத்தில் தொண்டரடிப் பொடியாழ்வார் திருமாலுக்குப் பாடிய திருப்பள்ளியெழுச்சி ஒன்றும், மணிவாசகர் சிவபெருமானைத் துயில் எழப் பாடிய திருப்பள்ளியெழுச்சி ஒன்றும், இராமலிங்க அடிகள் சிவபரம் பொருளைத் துயிலெழப்பாடிய திருப்பள்ளியெழுச்சி ஒன்றும், அருகதேவரைத் துயிலெழப்பாடிய திருப்பள்ளியெழுச்சி ஒன்றுமாக நான்கு பதிகங்கள் உள்ளன. மார்கழித் திங்களில் பொதுவாக திருப்பள்ளி எழுச்சி பாடுவது என்றல் அது பெரிதும் மணிவாசகர் பாடியதையே குறிப்பிடுகின்றது. அப்பதிகத்தைச் சற்று ஊன்றிப் பார்ப்போமாக.

திருவாசகத்தில் திருப்பள்ளி எழுச்சிக்கு 'திரோதானசுத்தி' என குறிப்பு தரப்பட்டுள்ளது. இவ்வாறே திருச்சதகம் நாலாம் பதிகம், 'ஆன்ம சுத்தி' எனவும், அருட்பத்து. 'மகாமாயா சுத்தி' எனவும் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றுள் ஆன்ம சுத்தியாவது, சித்தாந்த சாத்திரங்கள் கூறும் தசகாரியத்தில் ஒன்றாகும். ஆன்மாவைப்பற்றி நிற்கும் மலங்கள் ஐந்தென்பர் மணிவாசகர். "மலங்கள் ஐந்தாற் சுழல்வன் தயிரிற் பொருமத்துறவே" என்பது காண்க. ஐம் மலங்கள் ஆவன :— 1. ஆணவம், 2. கன்மம், 3. மாயை, 4. மாமாயை, 5. திரோதானம் எனப்படும். ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களும் ஆன்மாவைப் பற்றி நின்று, இறையருள் எய்தாவண்ணம் மறைத்து நிற்கின்றன. மாமாயையாவது பெருமாயை, மாமாயம், அணிமாயை என்றெல்லாம் கூறப்படும் சுத்தமாயை ஆகும். இதனை, அருட்சத்தியின் ஆணையால் மேற்குறித்த அசுத்தமாயை நீங்கப்

பெறும் ஆன்மாக்களைத்தெருட்டும் உபகாரசத்தி என்பர். திரோதானம் என்பது திரோதாயை எனவும், திரோதை எனவும் வழங்கப்படும் சுத்தமாயை. இது ஆன்மாக்களிடம் அருட்சத்தி பதியத் துணை புரியும் உபகார சத்தியாம்; எனினும் இவ்விரு சுத்தமாயாதத்துவங்களும் முதலில் ஆன்மாக்களுக்குத் திருவருள் பதியாவண்ணம் மறைத்து நிற்றலின் மலங்களெனவே வழங்கப் பெறும். சமய சூக்கும பஞ்சாக்கரத்தில் 'சிவாய நம' நகாரம் திரோதை எனவும், மகாரம் மகாமாயை எனவும் கூறப்படும். மேலும் நான்முகனது திருமுகங்களில் இருமுகங்கள் திரோதை, மகாமாயை என்பதும் உண்டு. மாமாயை விலகித் தெருண்ட ஆன்மாவில் அருள் பதிய முடியுமாதலின் அருட்பத்து மகா மாயை சுத்தி எனக் குறிக்கப்பட்டது அங்ஙனமே திருப்பள்ளி எழுச்சியும் திரோதான மலம் நீங்குவதையும், இறைவன் அருள் புரிவதையும் குறிப்பிடும்.

திருவாசகத்தில் நான்கு திருப்பதிகங்கள் முழுதும் 'அருள்' என்ற சொல்லைக் கூட்டி முடிக்கின்றன. திருப்பள்ளி எழுச்சி "பள்ளி எழுந்தருளாயே" எனவும், வாழாப்பத்து, "வருக என்று அருள்புரியாயே" எனவும், அருட்பத்து, "அது எந்துவே என்றருளாயே எனவும், பிடித்தபத்து, "எங்கு எழுந்து அருளுவது இனியே" எனவும் வினை முடிபு கொள்ளும். இவற்றுள் வாழாப்பத்தும், பிடித்தபத்தும் முறையே, முத்தி உபாயமும், முத்திக் கலப்புரைத்தலும் நுவலியவாதலின் இவ்விரு பதிகங்களும் அருள் நிலைத்த மேல் நிலை அனுபவத்தின்பால் படுகின்றன. ஏனைய திருப்பள்ளி எழுச்சியும், அருட்பத்தும் முறையே திரோதானசுத்தி, மகாமாயாசுத்தி எனக் குறிப்பிடப் படுதலின், திருவருள் ஆன்மாவில் காரியப்படுவதற்கு சுத்தமாயா மல நீக்கம் கூறுவதாகக் கொள்ளலாம். அருள் பதிவதற்கு மலம் நீங்கவேண்டும்; மலங்கள் நீங்குவதற்கு அருள் துணை செய்ய வேண்டும். ஆதலால் அருளாயே என்று ஆண்டவனைப் பரவுவாராயினர்.

போற்றிஎன் வாழ்முதல் ஆகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற்கு இணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத்து எமக்குஅருள் மலரும்
எழில்நகை கண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றுஇதழ்க் கமலங்கள் மலரும்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறைஉறை சிவபெரு மானே
ஏற்றுஉயர் கொடிஉடையாய் எமை உடையாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே. (1)

அருணன் இந் திரன் திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயப் நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற்று அண்ணல் அம் கண்ணும்
திரள் நிரை அறுபதம் முரல்வன இவைஓர்
திருப்பெருந் துறைஉறை சிவபெரு மானே
அருள் நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகட லேபள்ளி எழுந்தரு ளாயே. (2)

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளிஒளி உதயத்து
ஒருப்படு கின்றது விருப்பொடு நமக்கு
தேவநல் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறைஉறை சிவபெரு மானே
யாவரும் அறிவு அறியாய் எமக்கு எளியாய்
எம்பெரு மான் பள்ளி எழுந்தரு ளாயே. (3)

இப் மூன்று பாடல்களும் ஒரு கருத்துடையன.

போற்றி எனத் தொடங்கும் முதற் பாடல் போற்றித் திரு அகவலை நினைவுபடுத்துகிறது. அத்திரு அகவலுக்கு, 'அரிய திருவடி எளிதாயிற்று' என்ற குறிப்பு காணப்படும். திருவடியே திருவருளாதலின் திருவருள் புரிவதற்கு எழுந்தருள்வாயாக என வேண்டுகின்றார். மேலும் போற்றி என் வாழ்முதலாகிய பொருளே என்பது "நமச்சிவாய வாஅழ்க" என்பதுபோல, போற்றுதலை முதல் வைக்கும் தூல பஞ்சாக்கரத்தை நினைவு படுத்துமாறுங் காணலாம். பொழுது புலர்ந்தது; கமலங்கள் மலரும்; அருணன் இந்திரன் திசை அணுகினன்; இருள்போய் அகன்றது; அறுபதம் முரல்வன; கூவின பூங்குயில்; கூவின கோழி; குருகுகள் இயம்பின; ஓவின தாரகை; ஒளி ஒருப்படு கின்றது என்பன எல்லாம், இறைவன் திருவருள் புரிவதற்கு இயற்கைப் பொருள்கள் யாவும் ஒருமுகமாயின என்பதைப் புலப் படுத்தும். இறைவனை வணங்குவதற்கும் அவன் அருள் வேண்டும். எல்லோரும் அவனை வணங்கிவிட முடியாது. "அவன் அருளாலே அவன் தாள் வணங்கி" என்றவண்ணம், "நின் திருமுகத்து எமக்கு அருள்மலருமாதலால் கண்போல் மலர்ந்தகாமருசுனை மலர்கொண்டு நின் திருவடி தொழ நிற்கின் றோம்; அன்பரன்றி அறியொணு மலர்ச்சோதியே; யாங்கள்

எல்லாம் நின் அன்பர்கள்; அன்பினால் அகங்குழைந்து நெக்குருகிப் போற்றுதும்; எங்கள் வாழ்முதலே; ஆனந்த மலையே, சிவபெருமானே; தாளிணைகாட்டாய்" என வேண்டுகின்றார்.

திரோதான மல இருள் நீங்கிற்று; திருவருட் சூரியன் உதயமாயினன்; ஆணவச் சேற்றில் பத்திக் கமலம் மலர்ந்தது; அறுபதம் நாத நல்லிசை தொடுத்தன. அது கருங்குயிலும், செஞ்சேவலும் போன்று நிறம் மாறி ஒளிர்ந்து இசைக்கின்றது. ஒலியுடன் ஒளியும் நிறைந்து வருகின்றது. நாதமும் விந்துமாய் – ஒலியும் ஒளியுமாய் விளங்கும் நின்மலர் சிலம்படி நாதாந்தத்தினின்றும் எமக்கு வெளிப்படவேண்டும். ஆன்மப்பிரகாசம் மங்குப்படி அருள் ஒளி ஒருப்படுகின்றது. எம்பெருமானே! தாளிணைகாட்டி ஆட்கொண்டு அருள்புரிவாயாக! என இவற்றுள் வேறுமொரு பொருள் விளங்கியவாறு காண்க. (தொடரும்)

---

## பார்வையாளர்கள் குறிப்பு நகல்

தருமையாதீனப்

### ஸ்ரீ வீரட்டேசுவரசுவாமி தேவஸ்தானம், குறுக்கை

நானும், பெரியண்ணன், பெரியண்ணி, தஞ்சை மாமா, பிச்சை இவர்களுடனும் இன்று குறுக்கையில் எழுந்தருளியுள்ள ஈசனைக்கண்டு களிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. பாடல் பெற்ற இப்பழம்பெரும் சிற்றூர் பண்டைய தமிழரின் நாகரீகத்தை உணர்த்திநிற்கின்றது. கோயிலினைச் சுத்தமாகவும் இறைவழிபாட்டிற்கு உகந்த முறையிலும் நிர்வகிக்கும் அதிகாரிகளுக்கு என் வாழ்த்துக்கள்.

(ஒ-ம்) பு. ரா. கோகுலகிருஷ்ணன்,

தமிழ்நாடு உயர்நீதிமன்ற நீதிபதி,

4—1—75. சென்னை.

## கடிதம்

K. Ramalingam M. A.,
Research & Development Council,
Govt. of Tamilnadu.

" TAMIL MANAM "
21, East Park Road,
Shenoy Nagar, Madras 600030.

31—12—74.

அடியேன் வேலூர் மருத்துவ மனையில் நோயுற்றுக் கிடந்து அண்மையில் திரும்பினேன். மருந்தின்கடுமையால், உடல்நலமே சிதைந்துவிட்டது உரம் பெரிதும் குன்றியது, பேணிக்கொண்டதன் விளைவாக, இப்போது பெரிதும்நலமே, இது வரையில் வெளியே செல்லாமல் வீட்டோடு இருந்துவருகிறேன்.

குரு பெருந்தகையாரைத்தரிசித்துமகிழும்அவாஉந்துகிறது; என்று வாய்க்குமோ அறியேன். நேரில் கண்டுகளிக்க இயலாவிடினும், குரு பெருமானுரின் அருளுரைகளை 'ஞானசம்பந்தம்' இதழில் படித்துப் பயன்பெற்று வருகிறேன் அவ்வுரைகள், எளிய முறையில், உலக நிகழ்வுகளை எடுத்துக்காட்டி, அரிய கருத்துரைகளை உள்ளத்தில் பதியவைக்கும் அரும்பண்பு உடையவைகளாகத் திகழ்கின்றன.

'ஞானசம்பந்தம்' பான்மைமிக்க மாத இதழாகத் திருநெறிப் பணிபுரிந்து வருவது, உள்ளத்திற்குப் பேருவகை யளிக்கின்றது. உயர்கலைமன்ற மாநடுவர் திருமகராசன் அவர்கள் எழுத்து ஒவ்வோரிதழிலும் எழுச்சியூட்டும் உயிர் ஓவியமாக மிளிர்கிறது. மூதறிஞர் சொ. சிங்காரவேலனுரின் கட்டுரைகள், ஆராய்ச்சிப் பாங்குமிக்கு அகமகிழ்வித்து அழகு செய்கின்றன. அறிவு இளைஞாயிறனைய திரு. ந ரா. முருகவேள் அவர்களின் நுட்பம் சான்ற வரைவுகள், உளத்தினித்துத்துளும்ப வைக்கின்றன. இதழாசிரியரின் தலையங்கங்கள் திருநெறி விளக்கச்செய்தித்திரள்களாகத் திகழ்தருகின்றன.

இவ்விதழுக்கு முப்பத்து மூன்று ஆண்டுகள் நிறைந்து. முப்பத்து நான்காவது ஆண்டு துவங்குவது அறிந்து, அகமகிழ்கின்றேன். பல்லாண்டு பல்லாண்டு மேலும் பல சிறப்புக்களுடன் வளர்ந்து அருள்வளம் பெருக்கி வரவேண்டுமென என் அம்மை அங்கயற்கண்ணியையும் அழகிய சொக்கரையும், இறைஞ்சுகிறேன்.

குருநாயகரின் அருளாட்சியில், தருமைத்திருவாதீனம், புரிந்துவரும் அருள்நெறிப்பணிகளை, மாதந்தோறும் ஞானசம்பந்தத்தின் வழி, அறிந்துவரும் வாய்ப்பினைப், போற்றி யேற்று நன்றி கூர்கின்றேன்.

# செய்திகள்

## தருமையாதீனத்தில் குருபூஜை விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் 2 ஆவது குரு மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவச தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை விழா 31—12—74 செவ்வாய்க் கிழமையன்று, குருமூர்த்த ஆலயத்தில் காலை மாலை இருவேளை களிலும், விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் மிகச் சிறப்பாக நடைபெற்றது. காலை மாலை இருவேளைகளிலும் பேராசிரியப் பெருமக்களால் சித்தாந்தத்தெளிவியல் பற்றிய விரிவுரைகள் நிகழ்த்தப்பெற்றன. மாலைவழிபாட்டில் உலகத்தமிழ்மாநாட்டில் வெளியிடப்பெற்ற "சித்தாந்தத் தெளிவியல்" என்ற நூல் இரண்டாம் பதிப்பாக குருபூஜை விழா மலராக வெளியிடப் பெற்று அன்பர்களுக்கு வழங்கப்பெற்றன. ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் காலை மாலை இருவேளைகளிலும் எழுந் தருளி வழிபாடாற்றி தரிசனத்திற்கு வந்திருந்த அன்பர் களுக்குக் குருவருட்பிரசாதம் வழங்கி ஆசியருளினார்கள்.

## வேளூரில் திருப்பொன்னூசல் திருவிழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்த மான வேளூர் ஸ்ரீ வைத்தியநாத சுவாமி தேவஸ்தானத்தில் 20—12—74 முதல் திருப்பொன்னூசல் திருவிழா சிறப்பாக நடை பெற்றது. காலை மாலை இருவேளைகளிலும் திருவெம்பாவைப் பாடல்களை ஓதித் தீபாராதனை நிகழ்த்தப்பெற்றது. 29—12—74 ஞாயிற்றுக்கிழமை திருவாதிரைத் திருநாளாதலின் நடராஜர் அபிஷேகமும் தரிசனமும் நிகழ்ந்தன. விழா நாட்களில் வித்துவான் திரு. வை. மு. முருகையாதேசிகர் அவர்களால் திரு வெம்பாவை - திருப்பள்ளியெழுச்சி தொடர்விரிவுரை நிகழ்த்தப் பெற்றது. அன்பர்கள் பலர் வழிபட்டும் விரிவுரையைக் கேட்டும் பயன் பெற்றனர்.

## சீகாழியில் ஊஞ்சல் திருவெம்பாவை உற்சவம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்த மான சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில் ஊஞ்சல் திருவெம்பாவை உற்சவம் 20—12—74 முதல் 28—12—74 வரை

உள்ள நாட்களில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இரவு சுவாமி அம்பாள் பிராகாரத்தில் வலம் வருதலும், ஊஞ்சல் தீபாராதனையும், காலை மாலை இருவேளைகளிலும் ஸ்ரீ மாணிக்கவாசகர் பிராகாரத்தில் வலமாக எழுந்தருளலும், திருவெம்பாவை ஓதித் தீபாராதனை செய்தலும் நிகழ்ந்தன. 29-12-74 ஞாயிற்றுக் கிழமை திருவாதிரை ஆதலால் ஸ்ரீ நடராசப்பெருமான் அபிஷேகமும், திருவீதியுலாவும் நிகழ்ந்தன விழா நாட்களில் திருவெம்பாவை-திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களுக்குப் பொருள் விளக்கம் செய்து திரு. சொ. முத்தையன் M. A., அவர்களால் தொடர் விரிவுரை நிகழ்த்தப்பெற்றது. அன்பர்கள் பலர் கேட்டு மகிழ்ந்தனர்.

### தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கோயில்களில்

## திருவெம்பாவை - திருப்பள்ளியெழுச்சி தொடர் விரிவுரை

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கோயில்களில் திருவெம்பாவை பற்றிய விரிவுரைகள் நிகழ்த்தப்பெறவேண்டும் என்று ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவுளம்பற்றினார்கள். திருவாதிரையை இறுதியாகக் கொண்ட பத்து நாட்களும் ஸ்ரீ நடராஜப் பெருமானுக்குகந்த திருநாட்கள் ஆதலால் 21—12—74 சனிக்கிழமை முதல் 29—12-74 ஞாயிற்றுக்கிழமை முடிய உள்ள நாட்களில் திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி விரிவுரைகள் ஆதீனத்திலும் ஆதீனத் திருக்கோயில்களிலும் கீழ்க்காணுமாறு நடைபெற்றன.

தருமை ஆதீனத்தில் ஸ்ரீ சொக்கநாதப்பெருமான் பூஜை மடத்தில் தருமையாதீனத் தமிழ்ப்புலவர், டாக்டர். திரு. சொ. சிங்காரவேலன் M. A. Phd அவர்களால் விரிவுரை நிகழ்த்தப் பெற்றது.

திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் புலவர். திரு S சுவர்ணகாளீஸ்வரன் அவர்களாலும், திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் புலவர். திரு. தா. ம. வெள்ளைவாரணம் அவர்களாலும், திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் தருமையாதீனப் புலவர். வித்துவான். சிரோமணி. திரு. வி. சபேசன் அவர்களாலும், திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் திரு. அ. கலியபெருமாள் M. A., அவர்களாலும்,

திருக்குவளை ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில் புலவர். திரு. சு. மு. சுந்தரராசன் அவர்களாலும், ஆச்சாள்புரம் ஸ்ரீ சிவலோகத்தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில் திரு. சு. சாமிஐயா M. O. L., அவர்களாலும், திருமுல்லைவாயில் ஸ்ரீ முல்லைவன நாதசுவாமி தேவஸ்தானத்தில் புலவர். திரு. துரை. கல்யாணராமன் அவர்களாலும், பேரளம் ஸ்ரீ சுயம்புநாதசுவாமி தேவஸ்தானத்தில் புலவர். திரு. இரா. கோவிந்தராசன் அவர்களாலும், குறுக்கை ஸ்ரீ வீரட்டேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் புலவர். திரு. S. நற்குணம் அவர்களாலும், திருநின்றியூர் ஸ்ரீ லக்ஷ்மிபுரீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் புலவர். திரு. சா. முத்துக்கிருட்டினன் அவர்களாலும் திருப்பறியலூர் ஸ்ரீ வீரட்டேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் புலவர். திரு. அ. சுப்பிரமணியன் அவர்களாலும், தலைஞாயிறு ஸ்ரீ குற்றம்பொறுத்தீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் திரு. ச. சம்பந்தம்பிள்ளை அவர்களாலும், திருத்தருமபுரம் (காரைக்கால்) ஸ்ரீ யாழ்மூரிநாதசுவாமி தேவஸ்தானத்தில் புலவர். திரு. கோ. சாரங்கபாணி அவர்களாலும், மாயூரம் வள்ளலார்கோயில் ஸ்ரீவதான்யேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் தருமையாதீனத் தமிழ்ப்புலவர், வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்களாலும், மாயூரம் ஸ்ரீ காசி விசுவநாதசுவாமி தேவஸ்தானத்தில் புலவர். திரு. கா. ம. கண்ணப்பன் அவர்களாலும், மாயூரம்–குமரக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானத்தில் வித்துவான். திருமதி. ப. நீலா B. A., புலவர். திரு. M. சுந்தரேசம் பிள்ளை ஆகியோராலும் விரிவுரைகள் நிகழ்த்தப்பெற்றன.

விளநகர் ஸ்ரீ துறைகாட்டும்வள்ளலார் திருக்கோயில், மணக்குடி ஸ்ரீ சுந்தரேசுவரசுவாமி திருக்கோயில், கருங்குயில்நாதன் பேட்டை ஸ்ரீ சக்திபுரீசுவரசுவாமி திருக்கோயில் ஆகிய இடங்களில், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி நான்காம் ஆண்டு மாணவர்கள் முறையே சி. முருகவேள், அ. அருணைவடிவேல், கு. இராமலிங்கம் ஆகியோர் திருவெம்பாவை — திருப்பள்ளியெழுச்சி விரிவுரை நிகழ்த்தினர்.

உய்யக்கொண்டான் (கற்குடி) ஸ்ரீ உஜ்ஜீவநாத சுவாமி தேவஸ்தானத்தில் புலவர் திரு. மு. கணபதி அவர்களாலும், திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை மௌனமடம் கட்டளை மடத்தில் வித்துவான், திரு. தி. பட்டுச்சாமி ஓதுவார் அவர்களாலும், திருவாரூர் இராஜாங்கக்கட்டளையில் புலவர், திரு. மு. இரத்தினதேசிகர் அவர்களாலும், திருவெம்பாவை – திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களுக்குப் பொருள் விளக்கம் கூறி விரிவுரை

நிகழ்த்தப்பெற்றது. திருக்கோயில்களிலும் பிற இடங்களிலும் அன்பர்கள் பலர் வந்து கேட்டுப் பயன்பெற்றனர்.

திருநெல்வேலியில் :

திருநெல்வேலியில் உள்ள தருமையாதீனம் ஸ்ரீ குருஞான சம்பந்தர் திருமடத்தில் 21—12—74 சனிக்கிழமை முதல் திருவாதிரைத் திருநாளை முன்னிட்டு திருவெம்பாவை — திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களுக்குத் தொடர் விரிவுரையாக வித்துவான். திரு. ம. சிவசம்பு அவர்களால் பொருள் விளக்கம் செய்யப்பெற்றது. அன்பர்கள் பலர் கேட்டு மகிழ்ந்தனர்.

மதுரையில் :

தருமையாதீனம், மதுரை ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருமடத்தில், ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருவுளக் குறிப்பின் வண்ணம் 21—12—74 சனிக்கிழமை முதல் 30—12—74 திங்கட்கிழமை முடிய உள்ள பத்து நாட்களிலும் மாலை 6 மணி அளவில் பேராசிரியர், திரு. அ. சங்கரநாராயணன் அவர்களால் திருவெம்பாவை — திருப்பள்ளியெழுச்சி தொடர்விரிவுரை நிகழ்த்தப்பட்டது. புலவர். திரு. தா. குருசாமி தேசிகர் வரவேற்புரை நன்றியுரை முதலியன கூறி கூட்டத்தை உடனிருந்து நடத்தினார்கள். அன்பர்கள் பலர் வந்து கேட்டுப் பயன்பெற்றனர். திருமடத்தின் திருமுறை வகுப்பு மாணவர்கள் திருவெம்பாவைப் பாடல்களை ஓதினார்கள்.

சிதம்பரத்தில் :

சிதம்பரத்தில்உள்ள தருமையாதீனம் ஸ்ரீகுருஞானசம்பந்தர் திருமடத்தில் திருவெம்பாவை — திருப்பள்ளியெழுச்சி விரிவுரை 24—12—74 செவ்வாய்க்கிழமை முதல் 29—12—74 ஞாயிற்றுக்கிழமை முடிய உள்ள ஆறு நாட்களிலும் நாள்தோறும் மாலை 6 மணி அளவில் தொடங்கி நடைபெற்றது. சிதம்பரம் இராமசாமி செட்டியார் உயர்பள்ளித் தமிழாசிரியர், புலவர். திரு. கு. திருநாவுக்கரசு அவர்களால் விரிவுரை நிகழ்த்தப்பெற்றது. நாள்தோறும் அன்பர்கள் பலர் வந்து கேட்டு மகிழ்ந்தனர்.

குத்தாலத்தில் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான குத்தாலம் ஸ்ரீ உக்தவேதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் வார வழிபாட்டுக் கழகச் சார்பில் 23—12—74 திங்கட்கிழமை முதல் 29—12—74 ஞாயிற்றுக்கிழமை முடிய உள்ள ஏழு நாட்களில் திருவெம்பாவை — திருப்பள்ளி யெழுச்சி தொடர் விரிவுரை நடைபெற்றது. தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர், புலவர். திரு. இரா. செல்வக் கணபதி அவர்கள் விரிவுரையாற்றினார்கள். வார வழிபாட்டுக் கழகத் தலைவர் திரு. சி. ப. சிங்காரஞ் செட்டியார் அவர்கள் விரிவுரையைப் பாராட்டிப் பேசினார்கள். புலவர். திரு. ப. சி. பாலசுப்பிரமணியன் அவர்கள் பாராட்டுரை வாசித்துக் கொடுத்தார்கள். திரு. S. கோவிந்தராஜுலு அவர்களின் நன்றியுரையோடு விழா இனிதே நிறைவுற்றது.

### சென்னை, தருமையாதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில்

## திருவெம்பாவை தொடர்ச் சொற்பொழிவு

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் திருவெம்பாவை உற்சவத்தை முன்னிட்டு 20-12-74 முதல் 29-12-74 முடிய உள்ள பத்து நாட்களிலும் நாள்தோறும் மாலை 7 மணி அளவில் திருவெம்பாவை தொடர்ச் சொற்பொழிவு நடைபெற்றது. திரு. E. N. அருணசல முதலியார் M. A., அவர்கள் சொற்பொழிவைத் தொடங்கி வைத்தார்கள். கயப்பாக்கம் திரு. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் தொடர் விரிவுரையாக திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களுக்கு விளக்கம் சொன்னார்கள். பலர் வந்து கேட்டு மகிழ்ந்தனர்.

## பாவை மாநாடு

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில், 30—12—74 திங்கட்கிழமை மாலை 6-30 மணி அளவில் பாவை மாநாடு தொடங்கி நடைபெற்றது. திரு. சங்கரநாராயணன் அவர்கள் "உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்" என்ற தலைப்பிலும், புலவர். திரு. A. J. இராமசாமி முதலியார் அவர்கள் "உமக்கே ஆட்செய்வோம்" என்ற தலைப்பிலும், குமாரி. கௌரி "மார்கழி நோன்பு" என்ற தலைப்பிலும் விரிவுரையாற்றினார்கள். மாநாட்டில், பாவை நோன்பு நோற்கும் வகையைக்கூறி, நாட்டில் நல்ல மழை பொழியவும், மகளிர்கள் நல்ல கணவன்மார்களைப் பெறவும், மக்கள் நல்வாழ்வு வாழவும் பாவை நோன்பு இன்றி

யமையாதது என்று விளக்கினார்கள். வித்துவான். ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரை நன்றியுரை முதலியன கூறி மாநாட்டை உடனிருந்து நிகழ்த்தினார்கள்.

## சென்னை, சமயப் பிரசார நிலையத்தின் இருபத்தொன்றாவது ஆண்டின் நிறைவு விழா

சென்னை, தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தின் இருபத்தொன்றாவது ஆண்டின் நிறைவுவிழா 31–12–74 செவ்வாய்க் கிழமை மாலை 6-30 மணி அளவில் சென்னை உயர்நீதி மன்ற பிரதம நீதிபதி கனம் திரு K. வீராசாமி அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. தருமையாதீனப் பண்ணிசைப் புலவர், சங்கீத பூஷணம் திரு. பி சுவாமிநாதன் அவர்கள் திருமுறைப் பாடல்களைப் பாடினார்கள்.

வித்துவான் ஸ்ரீமத். மகாலிங்கத்தம்பிரான் சுவாமிகள், ஆதீனத்தில் செய்து வரும் சமயப்பிரசாரங்களையும், பல்வகைப் பணிகளையும் எடுத்துக் கூறி, ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் விழாவிற்கு அனுப்பிருந்த ஆசிச் செய்தியையும் வாசித்து அனைவரையும் வரவேற்றார்கள். பின்னர் தலைவர் அவர்கள் தமது தலைமையுரையில் தற்போது காணப்படும் சிரமங்களுக்கு எல்லாம் காரணம் மக்களிடையே சமய உணர்வும் பக்தியும், ஒழுக்கமும் இல்லாததேயாகும். நெடுநாளாக மழை யில்லாதிருந்த ஸ்ரீ வில்லிபுத்தூரில், பல ஆண்டுகளாக இழுக் காமல் நின்றிருந்த தேரை இழுத்தகால் நல்ல மழை பெய்தது. சென்னையில் உள்ள இப்பிரசார நிலையம் இருபத் தோராண்டு களாக நல்ல முறையில் பணியாற்றி வருகிறது. இப்பணி மேலும் மக்களுக்குப்பயன்படவேண்டும் என்றுகுறிப்பிட்டார்கள். அடுத்து செந்தமிழ்ச் செல்வர் கலைமகள் ஆசிரியர் வித்துவான்' திரு. கி.வா ஜகந்நாதன் எம்.ஏ. அவர்கள் பக்தியின்பெருமையைப் பற்றி விரிவுரையாற்றுகையில், அரசாங்கத்தின் ஒத்துழைப்புஇருந் தால் ஆதீனத்தின் சமயப்பணி மேலும் நன்கு வளரும் என்று தெரிவித்தார்கள். பல்கலை வித்தகர் திரு மீ. ப. சோமசுந்தரம் அவர்கள் விரிவுரையாற்றும் போது, நமது தருமை ஆதீனத் திற்கு குருமகாசந்நிதானமாக, இன்று ஒரு பெரிய ஞானி-மகான் கிடைத்திருக்கிறார்கள்: அவர்கள் செய்துவரும் சமய சமுதாய மொழித்தொண்டுகள் மேன்மேலும் வளர உதவுவது நமது கடமை என்று தெரிவித்தார்கள். நன்றியுரை வாழ்த்துப் பாடல் களுக்குப் பின்னர் விழா இனிது நிறைவெய்திற்று.

## திருமுறை வழிபாட்டின் மாத வழிபாடு

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் சென்னை, திருமுறை வழிபாட்டு அன்பர்களின் மாத வழிபாடு 22—12—74 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. வழிபாட்டிற்குப் பின்னர், திரு. S வடிவேல்பிள்ளை அவர்கள் தலைமையில், தருமை யாதீனப் பண்ணிசைப்புலவர், சங்கீதபூஷணம், திரு P. சுவாமி நாதன் அவர்கட்குத் தமிழக அரசு "கலைமாமணி" என்ற விருது அளித்துச் சிறப்பித்ததைப் பாராட்டும் விழாவும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் நினைவுநாள் விழாவும் நடைபெற்றன. சென்னை, உயர்நீதிமன்ற நீதிபதி, கனம். திரு N. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள், திரு. P. சுவாமிநாதன் அவர்கட்குப் பொன்னாடைப் போர்த்திப் பாராட்டினார்கள். அடுத்து திரு, P. சுவாமிநாதன் அவர்கள் ஸ்ரீ குருஞானசம்பந்தர் - ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி" இவ்விருகுருமூர்த்திகளின் அருள்வரலாற்றை இன்னிசை விரிவுரையாகநிகழ்த்தி தேவாரத் திருப்பதிகப் பாடல் பெற்ற 217 திருத்தலப் பதிகங்களைப் பாடி அனைவரையும் மகிழ் வித்தார்.

## திருவாசக வகுப்பு

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் 2—12—74, 9—12—74 16—12—74 ஆகிய திங்கட்கிழமைகளிலும் 6—12—74, 13—12—74 ஆகிய வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 7 மணி அளவில் திருவாசக வகுப்பு தருமையாதீனத் தமிழ்ப் புலவர், திரு. ந. ரா. முருகவேள் M. A., M. O. L., அவர்களால் நிகழ்த்தப்பெற்றது. அன்பர்கள் பலர் பங்குகொண்டு பயன் பெற்றனர்.

---

கடிதம் :

KUMARI MALAR

100 Mowbray's Road P. B. No. 1455 Alwarpet Madras. 18

* திருக்கடையூரில் நல்ல தரிசனம் செய்தேன். கோயில் மிகச் சுத்தமாக வைத்திருப்பது கண்டு மகிழ்ந்தேன். தேவஸ்தான விடுதியில் தங்கும் வாய்ப்பளித்தமைக்குப் பெரிதும் நன்றி யுள்ளேன்.

அன்புள்ள,

8—1—1975

ஏ. கே. செட்டியார்

# எதிர்காலம்

ஜோதிஷம். திரு. A. இராசமாணிக்கம்

ஆசிரியர்,

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

( ஆனந்தஹு தைமீ 1உ முதல் 30உ முடிய )

( 14—1—75 முதல் 12—2—75 முடிய )

| | | | |
|---|---|---|---|
| | | ல / கே | சனி |
| குரு | இராசி 12உ கும்ப சுக்கிரன் | | |
| பு சு சந் சூ | | | |
| செ | ரா | | |

ஸ்ரீ ஆனந்தஹு தைமீ 1உ மங்களவாரம் சூரிய உதயம் முதல் 18 நாழிகை 52 விநாடிக்கு கௌலவகரணத்தில், சிரவண நக்ஷத்திரத்தில், ரிஷப லக்கினத்தில் ஸ்ரீசூரியபகவான் மகர சங்கிரமணமாக தைமாதப் பிரவேசம் செய்தருளுகிறார். சங்கிரமண வாராதிபதி செவ்வாயாகிறார். மகர சங்கிராந்தி தேவதை மகோதரி. கருப்பஞ்சாறு ஸ்நானம் செய்து சித்திர வஸ்திரம் தரித்து சந்தனம் பூசி மகிழப்பூ புஷ்பம் சூடி பன்றிவாகனமேறி கிழக்குத் திக்கில் பயணம் செய்பவளாகிறாள். அதன் பலனாவது:- உலகில் யுத்தங்கள் நடப்பதற்கான சூசகங்களும், கோரச்செயல்களும், உள்நாட்டுப் பூசல்களும் ஏற்படும். பவழம், தங்கம், மாணிக்கம் போன்ற நீரஸ வஸ்துக்கள் விலை சரசமாகும். சஸ்ய தானிய விருத்தி மக்கள் தேவைக்கு ஓரளவு விருத்தியும், கரும்புப்பயிர் விருத்தியும் ஏற்படும். மற்றும் கிரகங்களின் ரீதியாக ஜனப் பிரதிநிதிகள் மந்திரிகள் மக்கள் நல சேவைகளைத் துரிதப் படுத்துதல்மூலம் பிரஜைகள் உணவு, உடை, இருப்பிடசௌகரியங்களையடைந்து க்ஷேமகரமாக வாழ்வார்கள். உலகில் தரும ஸ்தாபனங்கள், திருமடங்கள், ஆஸ்திக சங்கங்கள் செழித்து

ஓங்கும். தேவாலயங்களில் பூசைகள் சிறப்பாக நடைபெறும். மக்கள் தெய்வ உணர்வு உடையவர்களாகி சுபிட்சமாக வாழ் வார்கள்.

## 1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼

( சு. சே. சோ. லா. – லி. லு. லே. லோ. – அ. )

மேஷராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுப பலனைக் கொடுக்கும். 2 க்குரிய சுக்கிரன் நிலையால் தனவசதியும் சுகசௌகரியங்களும் இருந்துவரும். இம்மாதம் பூர்வீகப்பொருள் பிராப்தியும் நூதனவகைப் பொருள் செலாவணியும் ஏற்படும். 3, 6 க்குரிய புதன் நிலைமையால் சகோதரர்கள் விசுவாசமாய் நடப்பார்கள். ருணபாதையும் சத்துருக்களின் தொல்லையும் நீங்கும். லிகித ஒப்பந்த லேவாதேவிகள் சரளமாக நடை பெறும். சந்திர லக்கினுதிபதியாகிய செவ்வாய் ୨ல் இருந்து கர்மலாபாதிபதியால் பார்ப்பதால் மானசீகமான வெறுப்புணர் வும், பிதுர் சகோதரர்களுக்கு உடல்நலிவும் காட்டும். பாக்கியாதி பதியின் நிலையால் பெற்றோர் குருமார்களிடம் சாத்மீகபண்பில் நடந்துகொள்வதும், பொறுமையும், ஆசி பெறுதலும் ஆகும். லாபாதிபதி சனி வலுப்பெற்றதால் தோப்புத்துறவு, செங்கல் சூளை முதலியவற்றின் ஆக்கமும், செந்நெல் ஆதாய பிராப்தியும், அதிக முயற்சியால் ஏற்படுத்தும். கிரியை ஸ்தானத்தில் உள்ள கிரக சேர்க்கையால் அரசாங்கக்காரிய மேன்மையும், அரிய காரிய சித்தியும் ஏற்படும். தொழில் அல்லது உத்தியோகத்தில் சுறு சுறுப்பான போக்கும் கண்ணியமும் மேலோங்கும்.

## 2. ரிஷபம் – கார்த்திகை ¾ – ரோஹிணி – மிருகசீர்ஷம் ½

( இ. உ. ஏ. – ஒ. வ. வி. வு. – வே. வோ. )

ரிஷபராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிர மான பலனைக் கொடுக்கும். 2 க்குரிய புதன் மிச்சிரனுக இருப்பி னும் அதன் நற்பல ஸ்தானத்தில் வேறு கிரகம் இருப்பதால் தனவசதி தாராளமாக இருந்துவரும். மனைவிபுத்திரர்களாலான திரவிய வசதியை உண்டாக்கும். ஆயினும் மனைவி புத்திரர் சகோதரர்களின் நலனுக்கு நிர்ப்பந்தமான செலவும் நேரும். சுக்கிரன் 4, 5 க்குரியவருடன் சேர்ந்திருப்பதால் தெய்வ பக்தி மிகுதியும், குருமார்கள் தரிசனங்களும், வித்வஜன சேர்க்கையும் ஏற்படும். செவ்வாய் நிலைமையால் ஒரு விபத்தும், மனைவிக்கு பித்த மயக்கம் போன்ற தொல்லையும் வந்து நீங்கும். வீடு, பூமி, தொழில் முதலியவற்றில் புதிய மாறுதலை உண்டுபண்ணும். தொழில் துறையில் அதிக வருவாயும் உத்தியோகத்தில் பதவி உயர்வும் ஏற்படும்.

3. மிதுனம்–மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை–புனர்பூசம் ¾
( கா. கி. – கு. க. ங. ச. – கே. கோ ஹ )

மிதுன ராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுப பலனைக் கொடுக்கும். இந்த ராசிக்கு இந்தமாதம் சுக்கிரன் நிலைமையால் பண வசதிகளும் குடும்பத்தில் போஜனாதி சௌக்கியங்களும் திருப்திகரமாக இருந்துவரும். புதனின் சஞ்சார சுபத்துவத்தால் வித்தியாமேன்மையும், வியாபார விருத்தியும், வைத்தியம், சித்திரக்கலை, சாஸ்திரஞானம் முதலானவற்றில் ஈடுபாடுகளும் இருந்துவரும். 6, 11 க்குரிய செவ்வாய் நிலைமையால் சகோதரர் மனைவி மூலமான விவாதமும், மர்மஸ்தானத்தில் நோயும் வந்து நீங்கும். ஸ்திரீமூலமான சுபவாதங்கள் வந்து நீங்கும். கோர்ட்டு விவகாரத்திலும் பழைய பாக்கி வசூலிப்பதிலும் காலதாமதமாகப்பலனை அளிக்கும். புத்திரர்பௌத்திரர்கள் சௌக்கியம் நன்குக இருந்துவரும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் இயந்திரம்போல் கடமைப்பணி நடந்துவரும்.

4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்
( ஹி. – ஹு. ஹெ ஹோ. ட. – டி. டு. டெ. டோ. )

கடக ராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுப பலனைக் கொடுக்கும். 2 க்குரிய சூரியன் 7 ல் கிரகங்களுடன் சேர்ந்ததால் தன வசதி சிறப்பானதாகவே இருந்துவரும். பொன் மணி மாலை பிராப்தியும் சிங்காரமும் ஏற்படும். 3, 4 க்கு உரியவர்களின் சஞ்சாரத்தால் சமயோசித புத்தியும், நவீன காரியங்களில் ஈடுபடுவதும் சாஸ்திரானுபவ பிரசங்க கீர்த்திகளும், வித்துவத்ஜனங்களிடம்ஈடுபாடும், அரசாங்க பிரபலஸ்தர்களின் போற்றுதலும் ஏற்படும். 5 ல் இராகுவும் 6 ல் செவ்வாயும் இருப்பதால் குலதெய்வ பூசைகளும், கிரியாமேன்மையும், சத்துரு பங்காதிகளும் ஏற்படும். சகோதரர் அல்லது இரத்தசம்பந்தப் பட்டவருக்கு பித்தாதிக்கோளாறு ஏற்பட்டு நீங்கும். சனீஸ்வரன் சாத்மீகக்காலில் இருப்பதால் தொழில் அல்லது உத்தியோகத்தில் இருந்துவந்த அல்லல் குறையும். சனிபகவானுக்கு திலத்தீபம் போட்டு அஷ்டோத்திரம் ஜெபிக்கவும்.

5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼
( ம. மி. மு. மெ. – டோ. ட. டி. டு. – டே. )

சிம்ம ராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுப பலனைக் கொடுக்கும். 2 க்குரிய புதன் நற்பலஸ்தானத்தில்

இருப்பதால் பூர்வப்பொருள் பிராப்தியும், மகிழ்ச்சியும், வீட்டில் சுப மங்களங்களும் ஏற்படும். சந்திரலக்கினதிபதியின் இருபுறங் களிலும் கிரகங்கள் இருப்பதால் எக்காரியத்திலும் வல்லமையை யும் பந்துமித்திரர்களின் உபசரணைகளும் பெருமதிப்பும் ஏற்படும். 3 க்குரிய சுக்கிரன் நிலையால் இளைய சகோதரர் குடும்ப மேன்மை யும், வஸ்திராபரண அலங்கார பிராப்தியும் ஏற்படும். 4 க்குரிய செவ்வாய் நிலையால் மாதாவுக்கு பித்தமயக்கம்போன்ற தொல்லை வந்து நீங்கும். மனைவி புத்திரர்களின் சௌக்கியம் திருப்திகர மாக இருந்துவரும். இம்மாதம் 12 ஆந் தேதிக்குள் புத்திரோர் பத்தி ஏற்படச்செய்யும். கிரியைஸ்தானதிபதியின் நிலையால் செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் பிரபுத்வவதிகார சிறப்பும் இராஜாங்க பிரபலஸ்தர்கள் மரியாதையும் கண்யத்தை யும் கொடுக்கும்.

## 6. கன்னி – உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½

(டோ. பா பி. – பூ. ஷ ண. ட. – பே. போ.

கன்னியா ராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிரபலனை நடக்கும். 2 க்குரிய சுக்கிரன் நிலையால் பணவசதி திருப்திகரமாக இருந்துவரும். பிதாவிற்கு இருமல் போன்ற தொல்லையும் அதனால் ஓர் வைத்தியச்செலவும் நேரும். 3 க்குரிய செவ்வாய் நிலையால் சகோதரர் அல்லது இரத்தசம்பந்தம் உள்ளவருக்கு பித்த மயக்கம் வந்து நீங்கும். 4 க்குரிய சூரிவின் நிலையாலும் 4 ல் உள்ள கிரகத்தாலும் வீடு வாகனங்களில் சிக்கல் கள் இருந்துவரும். களத்திரத்திற்கு உஷ்ணவாத நலிவுகள் ஏற்பட்டு நீங்கும். தொழில் அல்லது உத்தியோகத்தில் பல சச்சரவுகள் காரணமாக மனவெறுப்பை உண்டுபண்ணும். ஆயினும் குரு வீட்சணம் இருப்பதால் மேலோர் தாட்சண்ய சலுகைகளும் மனம் தேர்தலுமாகும். 12 ஆம் அதிபதி சூரியனகி 5 ல இருந்தாலும் அதன் நற்பலஸ்தானத்தில் குரு இருப்பதால் புத்திரர்களுக்கு சுக பாக்கியங்களை உண்டாக்கும்.

## 7. துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

( ர. ரி. – ரு. ரே. ரோ. தா. – தி. து. தே. )

துலாராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுப பலனைக் கொடுக்கும். 2 க்குரிய செவ்வாய் நற்பலஸ்தானத்தில் இருப்பதால் தனவசதி திருப்திகரமாக இருக்கும். சகோதரர் களுக்கு பித்தாதிக்க நலிவுதோன்றி குணமாகும். பூமியந்திர வகையில் சிரமத்தின்மேல் நற்பலனைக் கொடுக்கும். புதன் நிலை யால் செய்தொழில் அல்லது உத்தியோகத்தை யல்லாமல் இதர

வருவாய்களும் இருந்து வரும். சுக்கிரன் நிலையால் சுக விருத்தியும் கணவன் மனைவியரிடையே பரஸ்பரம் ஒற்றுமையும் இருந்து வரும். ஆயினும், மனைவிக்கு இரத்த பித்த மயக்கம் வந்து நீங்கும். புத்திரர் பௌத்திரர்களின் சௌக்கியம். கல்விப் பயிற்சி சிறப்பாக இருந்து வரும். வழக்கு விவகாரங்களில் கால தாமதமாயினும் அனுகூலம் ஏற்படும். தொழில் அல்லது உத்தியோகத்தில் இருந்து வத்த சிரமம் நீங்கும். பிதாவுக்கு நல்ல வருமானங்களும் நற்கியாதியும் ஏற்படும். திட தைரிய சாமர்த்தியத்தை ஏற்படுத்தும்.

## 8. விருச்சிகம் - விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை.

( தோ. - ந. நி. நு. நே. - நோ. யா. யி. யு. )

விருச்சிகராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிர பலனைக்கொடுக்கும். 2க்குரிய குரு பலவீனமாகியும் 2ல் செவ்வாயும் இருப்பதால் குடும்பத்தில் அதிக செலவும் வாக்கு பாருஷ்யமும் சில அவசியமற்ற மனோவேக போக்குமாக இருந்து வரும். உடலில் காயங்களும் ஓர் விபத்தும் வந்து நீங்கும். இம்மாதம் சகோதரர்களின் உடல் நலம் பாதிப்பு ஏற்பட்டு தக்க வைத்தியத்தால் குணமாகும். புதன் பலகீன ஸ்தானத்தில் இருந்தாலும் அதன் நற்பலஸ்தானத்தில் வேறு கிரகம் இருப்பதால் வித்துவத்துறையிலும் தொழில் துறையிலும் பிரசித்தம் கொடுக்க வல்லதாகும். சுக்கிரன் சூரியன் நிலைமையால் அதிகம் சுகத்தையும் காரிய மேன்மையையும் உண்டாக்கும். இம்மாதம் புத்திரோர்ப்பத்திக்குரிய கிரகஅமைப்பு நன்குஅமைந்துள்ளது. கணவன் மனைவியின்வாழ்க்கை பரஸ்பரம் ஒற்றுமையும் அன்புடமையுமாக விளங்கும். தொழில் அல்லது உத்தியோகம் மிடுக்கான போக்கில் நடப்பதாக இருக்கும்.

## 9. தனுசு - மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

( யே. யோ. ப. பி. - பூ. த. ப. ட. - பே. )

தனுர்ராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிர பலனாக நடக்கும். 2 3க்குரிய சனி மிச்சிரனாக இருப்பதால் குடும்பத்தில் அதிக செலவும் சகோதரர்கள், பந்து மித்திரர்கள் மனஸ்தாபங்களும், பிறரால் ஏற்படும் அல்லல்களும் மன சங்கடமாக இருக்கும். 4க்குரிய குரு மிச்சிரனாக இருப்பதாலும், 4 ஆம் இடம் பாவர் பார்வை பெற்றதாலும் மாதாவிற்கு கண்டம் போன்ற தொல்லைகள் வந்து நீங்கும். 5 12க்குரிய செவ்வாய்

ஜென்மத்தில் சனிப்பார்வையுடன் இருப்பதால் தூர இடங்களுக்குப் பயணங்களும், தவறி கீழே விழுதல் இரத்தக்காயம் படுதல் முதலியனவும் நிகழும். 6 11க்குரிய சுக்கிரன் சஞ்சாரத்தால் ஒருபுறம் இருணமும், ஒருபுறம் நண்பர்களால் ஆதாயமும் ஏற்படும். 7, 10க்குரிய புதன் நிலைமையால் கணவன் மனைவியின் வாழ்க்கையில் ஒற்றுமை நிலவும். எழுத்து கல்வித்துறையில் சிரமங்கள் நீங்கும். மதி நுட்பத்தாலும் நூதன சாதனங்களாலும் வருமானங்கள் இருந்து வரும். செய்தொழில்கள் கீர்த்தி ஏற்படும்.

## 10. மகரம்–உத்திராடம் ¾ – திருவோணம் – அவிட்டம் ½

( போ. ஜ. ஜி. – கி. கு. கெ. கொ. – க. கீ.

மகரராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுப பலனைக் கொடுக்கும் 2 ஆம் இடமும் சனியும் சுப பல ரீதியில் இருப்பதால் குடும்பத்தில் எதிர்பாராத வகையில் வருமானங்கள் இருந்து வரும். சகோதரர்கள் விசுவாசமாக இருப்பார்கள். 4, 11க்குரிய செவ்வாய் வியம் பெற்று சனிப்பார்வைப் பெற்றதால் பூமி யந்திரம் முதலியவற்றில் அதிகச் செலவைச் செய்யும். வீடு வாகன வசதிகள் சாதாரணமாக இருந்து வரும். சகோதரத்திற்கு அல்லது மாதாவிற்கு உஷ்ணவாதத் தொல்லையைக் காட்டும். 5, 10க்குரிய சுக்கிரன் நிலைமையால் பெண்கள் வகை சுபகாரியங்களும் சுபமங்கள வைபவங்களும் நடைபெறும். பந்துக்கள் வருகை தருதலும், உபசாரங்களும், தெய்வ பக்தி மிகுந்து காணுதலுமாகும். புதன், சூரியன் நிலைமையால் தன் சுய புத்தி சத்தியாலாகின்ற வித்தியா வியாபாராதி முதலியவற்றில் நல்ல பிரக்யாதையையும் விருத்தி கரத்தையும் ஏற்படுத்தும். எதிராளிகளின் சூழ்ச்சிகள் இந்த ராசியை ஒன்றும் செய்துக்கொள்ள இயலாது. செய்தொழில் அல்லது உத்தி யோகத்தில் கண்ய நிலைமையாக இருந்து வரும்.

## 11. கும்பம் – அவிட்டம் ½ – சதயம் –பூரட்டாதி–¾

( கு. கே. – கோ. ஸ. ஸி. ஸு. – ஸே. ஸோ. த. )

கும்பராசி 9 பாதங்களும் எழுத்துக்களும், இம்மாதம் மிச்சிர பலனை நடக்கும். தனஸ்தானாதிபதி குரு பலவீன மானாலும் மற்றக் கிரகங்களின் சஞ்சாரத்தால் முன்பிருந்த சிரமநிலை நீங்கி இனிமேல் நல்ல காலம் ஆரம்பிக்கும். 3க்குடைய செவ்வாய் நல்ல நிலையில் இருப்பதால் சகோதரர்களால் உதவியும், விவகார

வழக்கில் ஜெயானு கூலங்களும் பூமி, செந்நெல் ஆதாயங்களும் ஏற்படும். 4, 9க்குரிய சுக்கிரன் சஞ்சாரத்தால் சுகானுபவங்களிலும் பெற்றோர்களின் சௌகரியங்களுக்காகவும் செலவுகளை உண்டுபண்ணும். களத்திர புத்திரர்களின் சௌகர்யம் திருப்திகரமாக இருந்து வரும். தொழில் துறையில் நாளுக்கு நாள் அபிவிருத்தி பலனும், உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் சலுகைகளும் உபவருவாய்களும் பதவி உயர்வும் ஏற்படும்.

## 12. மீனம் – பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி

( தி. – து. ஸ. ச. த. – தே. தோ. ச. சி )

மீனராசி 9 பாதங்களும், எழுத்துக்களும் இம்மாதம் சுப பலனைக் கொடுக்கும். 2க்குடைய செவ்வாய் தசமகேந்திரம் பெற்றுள்ளதால் தொட்ட காரியங்களில் எல்லாம் தன ஆதாயத்தை உண்டுபண்ணும். கூடவே லாப விரயாதிபதியாகிய சனி பார்ப்பதால் வரவு மும்மடங்கும், செலவு இரு மடங்குமாக இருக்கும். 3, 8க்குரிய சுக்கிரன் சஞ்சாரத்தால் சகோதரர் ஸ்திரீ முதலானோரிடம் இருந்த மனஸ்தாபங்கள் நீங்கி விசுவாச மனப்பான்மையையும், விவசாயம் தொழில் துறையில் நல்ல வருமானங்களும் வாகன சௌகர்யங்களும் ஏற்படும். 4, 7க்குடைய புதன் நிலையால் நூதன வாகனப் பிராப்தியும், சொந்த ஸ்திரீ சுக சௌகரியம் தானியப் பிராப்தி முதலியனவும் ஏற்படும். குடும்பத்தில் தெய்வகாரியங்களும் சுப விசேஷங்களும் நடைபெறும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் சிறப்பான அந்தஸ்தும் கண்யமும் ஏற்படும்.

---


# குமர குருபரன்

தருமையாதீனத்து முனிபுங்கவரும் ஸ்ரீ காசிமடத்து முதல்வருமான ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளிய நடையில் தெளியச் செய்யும் ஆராய்ச்சி விளக்கத்துடன் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின் வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

ஆண்டுச் சந்தா :– ரூ. 5—00.

விலாசம் :—

கௌரவ நிர்வாக ஆசிரியர்,
உயர்திருவாளர், கே. சுப்பிரமணிய பிள்ளை
குமரகுருபரன் ஆபீஸ், ஸ்ரீ வைகுண்டம்.

# ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின்

# மார்கழி மாதச் சிறப்பு வழிபாடு

மார்கழி மாதம் பீடுடைய மாதம் மக்களின் ஓராண்டுக்காலம் தேவர்களுக்கு ஒருநாள். மார்கழி மாதம் தேவர்களுக்கு விடியற் காலம் ஆதலால் திருக்கோயில்களில் இம்மாதத்தில் விடியற் காலையில் பிராம்ம திருப்பள்ளியெழுச்சி வழிபாடு சிறப்பாக நிகழ்த்தப்பெறுகின்றது. இம்மாதம் முழுவதும் தெய்வ வழி பாட்டில் ஈடுபட்டுத் தொடங்கும் காரியங்கள் எல்லாம் இவ் ஆண்டு முழுவதும் நன்மையாகவே நிறைவேறும் என்பது சான்றோர்களின் முடிவு

மார்கழிமாதத்தில் திருக்கயிலாயபரம்பரைத்தருமையாதீனத் திருக்கோயில்களில் எல்லாம் திருப்பள்ளியெழுச்சி வழிபாடு சிறப்பாகச் செய்யப்பெறுகின்றது. தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் நாள்தோறும் விடியற்காலையில் ஆன்மார்த்தமூர்த்தி ஸ்ரீ சொக்கநாதப்பெருமானுக்குத் திருப் பள்ளியெழுச்சி வழிபாடாக விசேஷ அபிஷேக ஆராதனைகளைச் செய்து வழிபட்டு, ஸ்ரீ ஞானபுரீசுவரர், ஸ்ரீ தருமபுரீசுவரர், ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி துர்க்காதேவி திருக்கோயில்களி லும் வழிபாடு நிகழ்த்திய பின்னர், ஆதீனத் திருக்கோயில் களுக்கும் பிற திருக்கோயில்களுக்கும் எழுந்தருளி மக்கள் பசி பிணி பகை முதலியன நீங்கி நல்வாழ்வு வாழ - நாடு செழிக்க - உலக நலங்கருதி வழிபாடு நிகழ்த்தியருள்கின்றார்கள். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் வழிபாட்டிற்கு எழுந்தருளும் திருக்கோயில்களில் அன்று நெய் தீபம் ஏற்றுவித்து, சுவாமி அம்பாளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தி பரிவட்டங்கள் சாத்தச் செய்து சகஸ்ரநாமார்ச்சனைசெய்ய பெறு கின்றன. அபிஷேக காலத்தில் அவ்வத் தலத்திருப் பதிகங்கள் ஓதுவாமூர்த்திகளால் பாராயணம்செய்யப் பெறுகின்றன.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஆதீனத் திருக் கோயில்களுக்கு வழிபாட்டிற்காக எழுந்தருளும்போதும் மேலா ளர்கள், மேற்பார்வையாளர்கள், ஆதீன அலுவலர்கள் பலர் உடன்சென்று, திருக்கோயிலின் உள்ளும் புறம்பும் தூய்மையாக இருக்குமாறு மேற்பார்வையிட்டும், கோயில் கணக்குகளைத் தணிக்கைசெய்தும், கோயில் நிர்வாகம் செம்மையாக நிகழ ஆவன செய்துவருகின்றார்கள்.

16—12—74 திங்கட்கிழமையன்று திருவையாறு ஸ்ரீ தர்மசம்வர்த்தனி உடனுறை ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி திருக்கோயிலுக்கும், 17—12—74, 24—12—74, 26—12—74, 31—12—74, 7—1—75 ஆகிய நாட்களில் வேளூர் ஸ்ரீதையல்நாயகி உடனுறை ஸ்ரீவைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்திற்கும், 18—12—74 அன்று திருநின்றியூர் ஸ்ரீ உலகநாயகி உடனுறை ஸ்ரீ லக்ஷ்மிபுரீசுவரசுவாமிதேவஸ்தானத்திற்கும், 19—12—74, 26—12—74, 2—1—75 ஆகிய நாட்களில் மாயூரம்-வள்ளலார்கோயில் ஸ்ரீ ஞானம்பிகை உடனுறை ஸ்ரீ வதான்யேசுவரசுவாமி தேவஸ்தானத்திற்கும், 20—12—74 அன்று பேரளம் ஸ்ரீ பவானியம்மையார் உடனுறை ஸ்ரீ சுயம்புநாதசுவாமி தேவஸ்தானத்திற்கும், 22—12—74 அன்று திருபுவனம் ஸ்ரீ அறம்வளர்த்தநாயகி உடனுறை ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானத்திற்கும் 24—12—74 அன்று கருங்குயில்நாதன்பேட்டை ஸ்ரீ ஆனந்தவல்லி உடனுறை ஸ்ரீ சக்திபுரீசுவரசுவாமி தேவஸ்தானத்திற்கும், 25—12—74, 2—1—75 ஆகிய நாட்களில் மாயூரம் ஸ்ரீ விசாலாட்சியம்மை உடனுறை ஸ்ரீ காசிவிசுவநாதசுவாமி தேவஸ்தானத்திற்கும் 27—12—74 அன்று மணக்குடி ஸ்ரீசௌந்தரநாயகி அம்மை உடனுறை ஸ்ரீ சுந்தரேசுவரசுவாமி தேவஸ்தானத்திற்கும், 29—12—74 அன்று ஆச்சாள்புரம் ஸ்ரீ திருவெண்ணீற்றுமையம்மை உடனுறை ஸ்ரீ சிவலோகத்தியாகராஜசுவாமி தேவஸ்தானத்திற்கும் 30—12—74 அன்று திருக்கடவூர் ஸ்ரீ அபிராமியம்மை உடனுறை ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்திற்கும், 3—1—75 அன்று சீகாழி ஸ்ரீ திருநிலைநாயகி உடனுறை ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்திற்கும், 4—1—75 அன்று திருநள்ளாறு ஸ்ரீ போகமார்த்தபூம்முலையாள் உடனுறை ஸ்ரீ தர்ப்பாரண்யேசுவரசுவாமி தேவஸ்தானம், காரைக்கால் தருமபுரம் ஸ்ரீ மதுரமின்னம்மை உடனுறை ஸ்ரீ யாழ்மூரிநாதசுவாமி தேவஸ்தானங்களுக்கும், 5—1—75 அன்று குத்தாலம் ஸ்ரீ மிருதுமுகிழாம்பிகை உடனுறை ஸ்ரீ உக்தவேதீசுவரசுவாமி தேவஸ்தானம், திருப்பறியலூர் ஸ்ரீ இளங்கொம்பனையாள் உடனுறை ஸ்ரீவீரட்டேசுவரசுவாமிதேவஸ்தானம், விளநகர் ஸ்ரீ தோழிநாயகி உடனுறை ஸ்ரீ துறைகாட்டும் வள்ளலார் சுவாமி தேவஸ்தானங்களுக்கும், 7—1—75 அன்று திருமுல்லைவாயில் ஸ்ரீ கோதையம்மை உடனுறை ஸ்ரீ முல்லைவனநாதசுவாமி தேவஸ்தானத்திற்கும், 10—1—75 அன்று தலைஞாயிறு ஸ்ரீ கோல்வளை நாயகி உடனுறை ஸ்ரீ குற்றம்பொறுத்தீசுவரசுவாமி தேவஸ்தானத்திற்கும் குறுக்கை ஸ்ரீ ஞானம்பிகை உடனுறை ஸ்ரீ வீரட்டேசுவரசுவாமி தேவஸ்தானத்திற்கும் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். 12—1—75 அன்று உய்யகொண்டான் (கற்குடி) ஸ்ரீ அஞ்சனாட்சியம்மை உடனுறை ஸ்ரீஉஜ்ஜீவநாத சுவாமி தேவஸ்

தானத்திற்கும் திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை ஸ்ரீ தாயுமான சுவாமி தேவஸ்தானத்திற்கும் 13—1—75 அன்று திருபனந்தாள் ஸ்ரீ பிருகந்நாயகி உடனுறை ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி தேவஸ்தானத்திற்கும் எழுந்தருளி வழிபாடாற்றுகின்றார்கள்.

2—1—75 அன்று திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான மாயூரம் ஸ்ரீ மாயூரநாத சுவாமி திருக்கோயிலுக்கு எழுந்தருளி ஸ்ரீ மாயூரநாதரையும், ஸ்ரீ அபயாம்பிகையையும் வழிபட்டு, தருமையாதீனத்திற்குச் சொந்தமான குமரக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானத்திலும் வழிபாடாற்றினார்கள்.

17—12—75 அன்று திருப்புன்கூர் ஸ்ரீ சிவலோகநாதர் தேவஸ்தானத்திற்கும் 22—12—75 அன்று திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான சூரியனார் கோயில் தேவஸ்தானத்திற்கும் 25—12—75 அன்று திருவழுந்தூர் ஸ்ரீ பரிமளரெங்கநாதர் தேவஸ்தானத்திற்கும் 28—12—75 செம்பனார்கோவிலுள்ள குமரக்கோயில் ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானத்திற்கும் 6—1—75 அன்று திருச்சிற்றேமம் (சித்தாய்மூர்) ஸ்ரீ அகிலாண்ட நாயகி உடனுறை ஸ்ரீ பொன்வைத்த நாதர் தேவஸ்தானத்திற்கும், 9—1—75 அன்று திருவாவடுதுறை ஆதீனத்திற்குச்சொந்தமான திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்கேசுவர சுவாமி தேவஸ்தானத்திற்கும் 10—1—75 அன்று சுவாமிமலை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத்திற்கும், திருவலஞ்சுழி ஸ்ரீ பெரியநாயகி உடனுறை ஸ்ரீ கற்பகநாதேசுவரர் தேவஸ்தானத்திற்கும் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான திருவாவடுதுறை ஸ்ரீ மாசிலாமணியீசர் திருக்கோயிலில் 13—1—75 அன்று அபிஷேக ஆராதனைகள் செய்விக்கப்பெற்றன.

திருவாதிரையை இறுதியாகக்கொண்ட பத்துநாட்களிலும் திருமுறைகளைக்காப்பிட்டு (பூஜையில் வைத்து) திருவெம்பாவைப் பாடல்களை மட்டுமே வழிபாட்டுக் காலங்களில் ஓதுதல் சைவ சமயச் சான்றோர்கள் பின்பற்றி வரும் மரபு. அதையொட்டி அந்நாட்களில் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களும் மார்கழி மாதத் தலவழிபாட்டின்போது சைவசமயாசாரியர்களால் பாடப்பெறாத தலங்களுக்குச் சென்று வழிபாடாற்றினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

திருவிடைமருதூர் ஸ்ரீமகாலிங்கப் பெருமானை மூலஸ்தானமாகவும், திருவலஞ்சுழி விநாயகப்பெருமானையும், சுவாமிமலை ஸ்ரீ சுப்பிரமணியப் பெருமானையும் ஆலங்குடி ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திப்

பெருமானையும் தில்லை நடராஜப் பெருமானையும் சீகாழி ஸ்ரீ சட்டை நாதரையும் (பைரவர்) திருவாரூர் சோமாஸ்கந்தப்பெருமானையும் (தியாகராஜர்) சூரியனார்கோயில் நவக்கிரக மூர்த்தத்தையும் திரு ஆப்பாடி சண்டிகேசுவரரையும் திருவாவடுதுறை நந்தியையும் பரிவார தெய்வங்களாகக் கொண்டுவழிபடுவதைச் சைவ சமயச்சான்றோர்கள் பின்பற்றுகின்றனர். மார்கழிமாதத் தல வழிபாட்டில் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் அம்முறையையும் பின்பற்றி அத்தலங்களுக்குச் சென்று தரிசனம் செய்தார்கள்.

அவ்வத்தலங்களிலும் திருக்கோயில் நிர்வாக அதிகாரிகளும் அறங்காவலர்களும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை வணங்கி வரவேற்று உடனிருந்து வழிபாடு செய்வித்தார்கள். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள், அறங்காவலர்களுக்கும் வழிபாட்டிற்கு வந்திருந்த அன்பர்களுக்கும் பக்தர்களுக்கும் திருவருட்பிரசாதம் வழங்கி ஆசியருளினார்கள்.

## முசுகுந்தார்ச்சனை

திருவாரூரில் :

19—12—74 அன்றும் 6—1—75 அன்றும் திருவாரூர் ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்திற்கு எழுந்தருளி ஸ்ரீ புற்றிடங்கொண்ட நாதரையும் ஸ்ரீ தியாகராஜப் பெருமானையும் சித்தீச்சரம் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியையும் தரிசித்தார்கள் 6—1—75 அன்று மாலை 8 மணி அளவில் ஸ்ரீ தியாகராஜப்பெருமானுக்கு ஸ்ரீ முசுகுந்த சகஸ்ரநாமார்ச்சனை செய்வித்து வழிபாடாற்றி அன்பர்களுக்கும் பெருமக்களுக்கும் திருவருட் பிரசாதம் வழங்கி ஆசியருளினார்கள். திரு. தக்ஷிணாமூர்த்தி முதலியார், நிர்வாக அதிகாரி திரு. சுப்பையாப்பிள்ளை ஆகியோர் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களை வரவேற்று உடனிருந்து வழிபாடு செய்வித்தார்கள்.

திருக்குவளையில் :

6—1—75 அன்று திருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்குவளை ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்திற்கு எழுந்தருளி வழிபாடாற்றி மாலை மணி 5-30 அளவில் ஸ்ரீ தியாகராஜப் பெருமானுக்கு ஸ்ரீ முசுகுந்த சகஸ்ரநாமார்ச்சனை செய்வித்து தரிசனம் செய்து வழிபாட்டிற்கு வந்திருந்த பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கி ஆசியருளினார்கள்.